ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௮ } மெய்கண்டான்யாண்டு-௭௱௭ பங்குனித் திங்கள் 1930௵ மார்ச்சு௴—ஏப்ரல்௴ { பரல் ௫

திருச்சிற்றம்பலம்

திருமந்திரம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

(பொ - ரை.) ஐந்து கைகளையும் யானை முகத்தையும் சந்திரனுடைய இளம் பிறையை யொத்த பற்களையும் உடைய நந்திக்கு மகனையும் ஞானச் சுடர்க் கொழுந்தாயுமுள்ள விநாயகக் கடவுளைச் சிந்தை செய்து வணங்குகின்றேன்; என்றவாறு. (௧)

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக்கு நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக்குட் டென்றிசைக் கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே.

(பொ - ரை.) தன்னை வணங்கும் பக்தர்கள் மனத்தில் தங்கிய பரிசுத்த தேகமுடையவனும் நான்கு திசைக்கும் தலைவனும் உமா தேவியாரை ஒருபாகத்தில் வைத்தவனும் சொன்ன நான்கு திசைக்குள் தென்றிசைக்கு ராஜாவாகிய யமனை உதைத்தவனுமுள்ள பரமேசுரனை நான் வணங்குகிறேன்; என்றவாறு. (உ)

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தா னைந்து
வென்றன னாறு விரித்தனனே ழும்பர்ச்
சென்றவன் றானிருந்தா னுணர்ந் தெட்டே.

(பொ - ரை] தான் ஒன்றாயும், தன் சத்தியோடு இரண்டாயும், பிரணவத்தில் மூன்றாயு மிருந்து நான்கு வேதங்களையும் உணர்ந்தாங்குணர்ந்து ஐந்து புலன்களின் சேட்டைகளை யடக்கி வேதாங்கங்களாறையும் சொல்லி மேல் ஏழுலகங்களினுமிருந்து அட்டமா சித்திகளையு மறிந்திருந்தான்; என்றவாறு. (௩)

ஒக்க நின்றானை யுலப்பிலி தேவர்கள்
நக்கு நின்றேத்திடு நாதனை நாடோறும்
பக்க நின்றா ரறியாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றி செய்வேனே

(பொ - ரை.) எவற்றிலும் உடனிருந்தவனும் அழிவில்லாத தேவர்கள் அநேகரால் சந்தோஷித்து எதிர் நின்று வணங்கப் படுகின்றவனும் அருகிருந்தாரும் அறியக் கூடாத மேலானவனும் உள்ள பரமேசுரனைப் புகுந்து நின்று வணங்குகின்றேன்; என்றவாறு. (௪)

அகலிடத்தார் மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தெம்மெய்யைப் போத விட்டானைப்
பகலிடத்தும் மிரவும் பணிந் தேத்தி
யிகலிடத் தேயிரு ணீங்கிநின் றேனே.

(பொ - ரை.) உலகத்தார்க்குச் சத்தியமான பொருளானவனும அண்டங்களுக்கு விதை போன்றவனும் நாமெல்லாம் தஞ்சம் புகுமிடமாய் எம்மைப் பிறப் பிறப்புக்களிற் போகவிட்டவனுமுள்ள கடவுளை இராத்திரியும் பகலும் ஒழியாது வணங்கி மாறுபாடான இவ்வுலகத்து இருளினின்றும் நீங்கி நின்றேன்; என்றவாறு. (௫)

சிவனோ டொக்குந் தெய்வந்தே டினுமில்லை
யவனோ டொப்பா ரிங்கியா வருமில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரை யானே.

(பொ-ரை.) *சிவனுக் கொப்பானதும் மேலானதுமான தெய்வம் தேடிப் பார்த்தாலுங் கிடையாது; இந்த உலகத்திலேயும் அவனுக்குச் சமான மொருவருமில்லை; அப்பேர்ப்பட்டவனுடைய உருவம் புவனங்களை யெல்லாம் கடந்து நின்று சுவர்ணப் பிரகாசம் செய்யும் வெள்ளைச் சடையுடைய தாமரை நிறம்; என்றவாறு.* (௬)

அவனை யொழிய வமரரு மில்லை
யவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை
யவனன்றி மூவரா லாவதொன் றில்லை
யவனன்றி யூர்புகு மாறறி யேனே.

(பொ-ரை.) *அவனை யன்றித் தேவருமில்லை; அவனை யொழித்துச் செய்யும் கடுமையான தபசுமில்லை; அவனை யல்லாமல் பிரம விஷ்ணு உருத்திரர்களா லாவதொன்றில்லை; ஆதலால், அவனை யல்லாமல் மோக்ஷத்துக்குப் போகும் வழியறியேன்; என்றவாறு.* (௭)

முன்னை யொப்பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
றன்னை யொப்பா யொன்றுமில்லாத் தலைமகன்
அன்னை யப்பாவென்னி லப்பனு மாயுளன்
பொன்னை யொப்பாகின்ற போதகத் தானே.

(பொ-ரை.) *பழையராய்த் தம்மிற் சமத்துவமுடைய பிரம விஷ்ணு உருத்திரர்களுக்கு மூத்தவன்; தனக் கொப்பொன்றுமில்லாத் தலைமகன்; தாய் தகப்பனென்று சொன்னாலும் அப்படியே யுள்ளான்; பொன்னைப் போலப் பிரகாசிக்கும் அறிவினை யுடையான் அவன்; என்றவாறு.* (௮)

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினு மீசனரு ளறிவா ரில்லை
சேயினு நல்லனணிய னல்லன் பார்க்குத்
தாயினு நல்லனாற் றாழ்சடை யோனே.

(பொ - ரை.) அக்கினியில் உஷ்ணமாக வுள்ளவன்; தண்ணீருள் குளிர்ச்சியாக வுள்ளவன்; அப்படியிருந்தாலும் அவன் கருணையின் தன்மையை யறிபவர்களில்லை; பக்திமான்களுக்குப் பிள்ளையைப் பார்க்கிலும் நல்லவனும் அண்மையி லுள்ளவனுமுள்ளான்; தாயைப் பார்க்கிலும் நல்லவனுள்ளான்; கீழே விழும் சடையை யுடைய பரமேசுரன்; என்றவாறு. (௯)

பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க விருந்தவன் பேர்நந்தி
யென்னாற் றொழப்படு மெம்மிறை மற்றவன்
றன்னாற் றொழப்படுவா ரில்லை தானே.

(பொ - ரை.) பொற் கயிற்றினாற் கட்டப்பட்டதுபோற் பொன்னிறம் பிரகாசிக்கப் பின்னால் தொங்கும் சடையை யுடையன்; நந்தியென்னும் பேருடையான்; என்னால் வணங்கப்படும் எம்முடைய தலைவனுவான்; அவன் தன்னால் வணங்கப்படுவா ரொருவருமில்லாதான்; என்றவாறு. (௰)

தானே யிருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலுமாய் நிற்குந்
தானே தடவரைத் தண்கட லாகுமே.

(பொ - ரை.) பெரிய பூமியைத் தாங்குபவனுந் தானே; ஆகாயமாய் நிற்பவனுந்தானே; சுடுகின்ற அக்கினியாகவும் சூரியனாகவும் சந்திரனாகவும் மழை பெய்கின்ற மேகமாகவும் நிற்பவனுந் தானே; தானே உமையாயும், பர்வதமாயும் சமுத்திரமாயு நிற்பான்; என்றவாறு. (௧௧)

—உண்மை விளக்கம்.

தமிழும் அறிவியல் நூல்களும்.

(திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L.)

மேலை நாட்டு அறிவியல் நூல்களைத் தமிழிலே கலாசாலை மாணவர்க்குக் கற்பிக்கவேண்டும் என்ற கொள்கையானது சில காலமாகப் பெரிதும் பேசப்பட்டு வருகின்றது. அதனை நிறைவேற்றுதற் பொருட்டு அறிவியல் நூல்களில் வல்ல பல கலாசாலை ஆசிரியர் கூடிய கழகம் ஒன்று கல்வி இலாக்கா அதிபதியால் நியமிக்கப்பட்டு வேலை செய்து வருகின்றது. திரு. சத்தியமூர்த்தி ஐயரைப் போன்ற சில சொல்லாளர்களும் இது நிகழ்த்தப்பட வேண்டும் என்று பல்கலைக் கழக மேடைகளிலும் பிற இடங்களிலும் ஆர்வத்துடன் பேசி ஒழிவது பலரும் அறிந்ததே. ஆனால் அதன் சார்பாக வேலை செய்கின்றவர்களும் பேசுகின்றவர்களும் தமிழ் மொழி வல்லுநரை இவ்வேலைக்கு உடனுழைக்கும்படி பயன் படுத்தக் கருதாமையானும், தமிழில் போதுமான ஆற்றல் தமக்கு வாய்க்கப் பெறுமையானும் தமது வேலையைத் தக்க முறையில் நடத்த இயலாதவர்களாதலோடு தமிழ் மொழிக்கும் ஒருவாறு ஊறு செய்தவர்கள் ஆகின்றார்கள். தமிழ் மொழியின் இயல்பினையும் ஆற்றலையும் பெருமையையும் உணராதவர்களும் அவற்றை உணர்தற்கு வேண்டிய விருப்பமில்லாதவர்களும் இவ்வேலையில் தலையிடுதல் தக்கதன்று.

ஏனெனில், அறிவியல் நூற்சொற்களை அன்னோர் வடமொழியிற் பெயர்த்து அப்பெயர்ப்புகளைத் தமிழிற் புகுத்த முயல்கின்றார்கள். அங்ஙனம் முயல்வதால் இதுவரை தமிழிற் புகாத கணக்கற்ற வடசொற்றொடர்கள் தமிழிற் புகுந்து தமிழானது வடமொழியின் ஒரு கிளைமொழி என்று தோற்றுவித்தற்கு இடமுண்டாகிறது. தமிழ் மொழியின் சொல்லாக்க ஆற்றல் புலப்படாது மறைதற்கு ஏதுவாகின்றது. இதுவரை தமிழில் வந்துள்ள வடமொழிகளாலும், தமிழ் மொழிகளை வடமொழியின் சிதைவெனப் பிதற்றும் சில போலிப் புல

வர்களது மயக்க வுரைகளானும் பொதுமக்களிற் பலர் தமிழ் வடமொழியின் கிளைபோலும் என்று தியங்கித் திரி புணர்ச்சி உடையராகின்றார்கள். இன்னும் வடமொழிகள் மிகுதியாகத் தமிழிற் புகுமாயின் பிறதிராவிடமொழிகள் போலத் தமிழ் மொழியும் உருமாறிப் போகும். மேலை நாட்டு அறிவியல் நூற்சொற்களை நேராகத் தமிழில் புகுவிப்பது இதனினும் சிறந்தது. வடமொழிவாயிலாக அவை தமிழில் வருமாயின் தமது உண்மை வடிவும் ஆற்றலும் கெட்டு அவை வடமொழிக்கு உரியனவோ என்று பொது மக்கள் ஐயுற்றுத் திரிபுணர்ச்சி எய்துதற்கு வழி வகுத்தவாறாகும்.

அறிவியல் நூற்சொற்களை மொழி பெயர்ப்பதற்குத் தமிழினும் வடமொழி சிறந்ததும் அன்று. துவி சக்கரவண்டி என்பதினும் 'ஈருருளி' என்பது சுருக்கமும் திட்பமும் உடையது. 'விஸ்லேஷணம்' என்பதைப் பார்க்கிலும் வகை அல்லது விரி என்பது சுருங்கிய நயமுடையது. 'சமரூபாந்தர விகாரங்கள்' என்பதைப் பார்க்கிலும் 'ஒரியற் பல்லுரு' என்பது திட்பமுடையது அன்றோ. பிறவும் அன்ன.

உண்மைத் தமிழ்ப்பற்றுடைய நன்மக்கள் தமிழ்ப்பற்றும் அறிவும் இல்லாதார் தமிழைப் பல்வகையினும் பாழ்படுத்தா வண்ணம் அதனைப் பாதுகாக்கக் கடமைப் பட்டிருக்கின்றார்கள்.

ஆங்கிலங் கற்ற தமிழரிற் பலர் தமிழ் வளர்ச்சியைப் பேணுவதில்லை. தமிழை நன்குகற்ற அறிஞர் பலர்க்கு வறுமை ஓர் இடையூறாக இருக்கின்றது. அவர்களது அறிவினைப் பயன் படுத்தும் நன்முயற்சியைத் தமிழ்ச் செல்வர் மேற்கொள்வதில்லை. கல்வியையும் செல்வத்தையும் ஒருங்கு இயைவிக்க முயலும் உழைப்பாளிக்குத் தமிழரது ஒற்றுமை இன்மையாற் பல கேடுகள் விளைகின்றன. ஆங்கிலம் கற்று அதிகாரமும் செல்வமும் உடைய ஒரு கூட்டத்தார் தமிழை இழிவு படுத்தித் தாழ்த்துவதினாற்றான் தங்கள் சிறப்புஞ் சீரும் நிலையுறும் என்றெண்ணித் தமிழ்க்கு நன்மை செய்வார்போற் பசந்து காட்டிப் பல் வகைச் சூழ்ச்சிகளாலும் இன்னல் விளைக்கின்றார்கள். ஆதலின் தமிழின்

இயல்பையும் தமிழரது கடமையையும்பற்றி ஒரு சிறிது இங்கே கூறவேண்டியதாக இருக்கின்றது. சங்க நூல்களிற் பல வெளியாதற்கு முன்னரே அச்சியற்றப்பெற்ற பிற்காலத்துத் தமிழிலக்கியங்களை நன்குகற்ற ஐரோப்பிய புலவர் சிலர் தமிழின் பெருமையைப் பாராட்டி யிருப்பதைப் பார்த்து இந்நாட்டுப் போலித் தமிழ் நண்பர்கள் வயிறெரிகின்றார்கள்.

டாக்டர் வின்சிலோ என்பவர் தமிழைப்பற்றிக் கூறுவதாவது "தமிழ் ஓர் இழிந்த கிளை மொழி யன்று. ஆங்கிலத்திற்கு எழுத்து அமைவதற்கு முன்னரே தமிழானது மிகவும் நாகரிகத்தோடு திகழ்ந்தது. கிரீக் மொழியினும் தமிழ் திண்மையும் செப்பமும் வாய்ந்தது. லத்தீன் மொழியைப் பார்க்கிலும் அது வள முடையது. தற்கால மொழிகளுள் ஆற்றலினும் நிறைவினும் அஃது ஆங்கிலம் ஜர்மென என்னும் மொழிகளை ஒத்திருப்பது" என்பதே.

மேலை நாட்டில் அறிவியல் நூற்சொற்கள் பலவும் கிரீக், லத்தீன், மொழிகளினின்று எடுத்தமைத்துக் கொள்ளப்பட்டனவே. அவை போலத் திட்பமும் செம்மையும் வாய்ந்த தமிழ் மொழியானது அறிவியல் நூற் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஏன் பயன்படாது? அவைகள் போலத் தமிழ்மொழி இறந்த மொழியாகவும் இல்லை. ஆங்கிலம் ஜர்மென் முதலியவற்றோடு ஒத்திருத்தலால் இவைகள் போல வழக்காற்றிற் சிறந்து விளங்குவதற்கும் தமிழ்க்கு ஆற்றல் உண்டென்பது தெளிவாதல் காண்க. பழையவற்றுட் பழமையாயும் புதியவற்றுள் சிறந்ததாயும் விளங்குகின்ற தமிழ் மொழியின் ஆற்றலை அறியாதார் அதனைப் பயன் படுத்தவும் அறியாரென்க.

முப்பத்தேழு ஆண்டு தமிழ் கற்ற டாக்டர் கால்டுவெல் என்பவர் கூறுவதாவது "திராவிட மொழிகள் எல்லாவற்றினும் மிகத் திருத்தம் வாய்ந்த தமிழானது வேண்டுமாயின், வடமொழியை முழுதும விட்டுத் தனித்து நிற்கும் ஆற்றலுடையது. அங்ஙனம் தனித்து நிற்றலோடமையாது வடமொழியின் உதவியின்றிச் செவ்விதிற் றிகழவுங்கூடும். தமிழ் ஒழிந்த பிற

திராவிட மொழிகளைப்பற்றி அங்ஙனங்கூற இயலாது. தெலுங்குக்கு இற்றை நிலைமையில் வடமொழிகளை நீக்கி விடுதல் அரிதாகும். கன்னடத்திற்கு அதனினும் அஃது அரியதாகும். மலையாளத்திற்கு அது மிகுதியும் இயலாததாகும். இம்மொழிகள் மிகுதியாக வடமொழியில் கடன் வாங்கி உதவிவேண்டும் போதெல்லாம் வடமொழியை உற்று நோக்கி உதவி கொள்ளப் பழகிவிட்டன" என்பதே. இதனால் பன்னாளாகத் தமிழறிஞர்கள் தம்மால் இயன்றவரை வடமொழி வெள்ளப் பெருக்கினைத் தடுத்துத் தமிழைப் பாதுகாத்து வந்தனர் என்பது போதரும். அவர்கள் அங்ஙனம் செய்யாவிடில் தமிழின் தனிச்சிறப்பை நாம் இன்று இழந்திருப்போம். தென்னாடு முழுவதும் தமிழே ஒரு காலத்தில் பரவியிருந்தது. தெலுங்கு, கன்னடம், மலையாளம், என்பவற்றை இப்பொழுது வழங்குமிடங்களில் வதிந்தோர் செந்தமிழ் நிலத்து மக்களோடு தொடர்பற்றுத் தனித்தனிக் குழாங்களாய் வாழ்ந்த காலத்தே அவர்கள் பேசும் மொழிகள் திரிவுற்றன. திரிவுற்ற மொழிகளைத் திருத்துவார் போற் புகுந்த ஆரியமரபினர் அவற்றின் நெடுங்கணக்கினைத் தமது ஆரிய மொழிக்குத் தக்கவாறு திரிவுபடுத்தி அவற்றிற் கிலக்கணமும் ஆரிய மொழியிலேயே அமைத்து விட்டமையால், அவை ஆரியத்தின் திரிபுபோல் தோன்றுவன ஆயின. தமிழோடு அவற்றிற்குள்ள தொடர்பினை அறியாத தெலுங்கரும் கன்னடரும் மலையாளரும் தத்தம் தாய் மொழிகள் ஆரியத்தின் கிளைமொழிகள் எனத் திரியக்கொண்டு ஆரியத்திற்கு அடிமையாய்த் தமிழ்த் தாயினை மறந்து அவளைப் புறம் பழித்தலும் செய்கின்றார்கள். இற்றைக் காலத்திலே அறிவியல் நூற் கருத்துக்களை வெளியிடு முகத்தான் தமிழின்கண் ஏராளமாக ஆரியச் சொற்கள் புகுமாயின் தமிழ் நெடுங் கணக்கைப் பிற திராவிட மொழிகளின் நெடுங்கணக்கோ டொப்ப ஆரியமாக்க வேண்டிய அவசியம் சிறிது காலத்திற்குள் ஏற்பட்டுவிடும். அதனால் அம்மொழிகளுக்கு ஏற்பட்ட உருமாற்றம் தமிழ் மொழிக்கும் ஏற்பட்டுத் தமிழும் ஆரியத்தின் முழு அடிமையாய்ச் சிதைவுற்றுச் சிறப்பிழக்கும். அத்தகைய சீர்குலைவு ஏற்படுங் காலத்தைத் தமிழ்

எதிரிகள் கண்ணுங் கருத்துமாய் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழகங்களில் தமிழ் கட்டாயப்பாடங்களுள் இருக்கக்கூடாதென்பார் சிலர்க்கு இக்கருத்துண்டு. தமிழிலக்கியத்தை ஆங்கில அறிவுடைய தமிழ் மக்கள் கல்லாமற் போனால் தமிழின் வளமும் ஆற்றலும் அவர்களுக்குப் புலன்படாதுபோகும். போகவே ஆங்கிலத்தில் தாம் கற்ற கருத்துக்களையே தமிழிற்பயன்படுத்த வேண்டும் என்று நினைப்பார்கள். பயன்படுத்துதற்கு வேண்டும் தமிழறிவு இல்லாமையால் வடமொழியாளர் கூறுகின்ற முறையைத் தழுவி ஆங்கிலச் சொற்களையும் வடசொற்களையும் அவற்றின் போக்குகளையும் தமிழில் வழங்குவர். அங்ஙனஞ் செய்வதால் தமிழின் செம்மையைத் தொலைப்பதற்கு ஆங்கிலங்கற்ற தமிழரே தக்க கருவியாவர். ஆங்கிலம் மாத்திரம் கற்ற தமிழரிற் பலர் ஆங்கிலங்கலவாது தமிழ்ப் பேசத்திறமை அற்றவர்களாக இருக்கின்றார்கள். சிற்சில இடங்களில் ஆங்கிலமொழிப் போக்கைத் தழுவித் தமிழ் பேசி நகைச்சுவை விளைக்கின்றார்கள்.

நகைச்சுவைக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் "ஆரியர் கூறுந் தமிழ்" என்று உதாரணங்காட்டினார். இக்காலத்திலே ஆங்கிலத் தமிழர் கூறுந்தமிழ் என்று அதற்கு உதாரணங் கூறுதல் வேண்டும். உணவுகோடலை, உணவு 'எடுத்தல்' என ஆங்கிலம் அறிந்தார்பலர் இக்காலத்து வழங்குதல் காண்க. இன்னோர் அறிவியல் நூல்களை வடமொழிப்படுத்திய தமிழினில் ஓதவும் ஓதுவிக்கவும் செய்யத்தொடங்கி விட்டால் அது நற்றமிழ் அறிஞர்க்கு நகைவிளைத்தலோடு கவலையையும் எழுப்பும்.

சில அறிஞர் தமிழிலே உயர்தரக் கல்வி முறைகள் ஆங்கில கலாசாலையில் ஏற்படுத்துதலே போதும், தமிழ் கட்டாயப்பாடம் ஆகவேண்டியதில்லை என்கிறார்கள், அவர்கள் கொள்கையும் தவறுடையதே. ஆங்கிலக் கலாசாலைகளில் பிரவேச பரிசோதனை வரையுள்ள தமிழ்ப் படிப்பு எளிதான இலக்கியச்சார்புடையதாயும் அதற்கு அடுத்த பரிசோதனைக்குள்ள தமிழ்ப் படிப்பு

நடுத்தர இலக்கியச் சார்புடையதாயும், பி. ஏ. பரீக்ஷைக்குரிய தமிழ்ப்படிப்பு உயர்தர இலக்கியமாகிய சங்க நூற்சார்புடைத் தாயும் இருத்தற்பாலது. உயர்தர இலக்கிய நயத்தினை அறியப் பெறுதவர்கள் தமிழின் தனியாற்றலை உணரமாட்டாதவராவர்.

வடமொழிக்கலப்பு மிக்க பிற்காலத்துத் தமிழிலக்கியங்களை மாத்திரம் கீழ் வகுப்புக்களிற் கற்று விட்டு உயர் வகுப்புகளில் உயர்தனித்தமிழிலக்கியங் கற்கப்பெறுது தமிழை மறந்து விடு கின்ற மாணவர் தமிழ் ஆராய்ச்சி செய்யும் திறனில்லாதவராயும், செந்தமிழ் மொழியில் எழுதும் ஆற்றல் இல்லாதவராயும், செந் தமிழ் ஆராய்ச்சி நூல்களை வாசிப்பதற்கு ஊக்கமில்லாதவர்களா யும், பிறமொழி நூல்களைக் .கற்பதிலும் பிறதொழில்கள் செய் வதிலுமே ஈடுபடுவர். செகப்பிரியர் மில்டனர், முதலிய பெரும் புலவர்களது நூல்களின் சுவையறியாது ஆங்கிலப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில மக்கள் பிறவற்றைப் பயின்று வெளிவருவதை ஆங்கில நாட்டினர் விரும்பாமை போலத் தமிழ் நாட்டுப் பல் கலைக் கழகத்தில் தமிழ் உயர்தர இலக்கியச்சுவையை அறியாது தமிழ் மாணவர் பிறவற்றை மட்டும் பயின்று வெளிவருதலைத் தமிழ் நன்மக்கள் விரும்பார் என்க.

இதுகாறுங் கூறியவாற்ருல், அறிவியல் நூற்கருத்துக்கள் தமிழில் நன்கு பரவுதற்குக் கட்டாயத் தமிழ்க் கல்வி ஆங்கிலக் கலாசாலையிற் பி. ஏ. முதலிய உயர் வகுப்புகளுக்கு அமைத்தல் ஒரு சிறந்த துணையாமென்பது வலியுறுத்தப்பட்டது.

இனி, அறிவியற்கருத்துக்களுக்கேற்ற சொற்கள் ஈட்டு வோர், தமிழிலே மருத்துவநூல்வல்லார், பல்வகைக்கம்மத் தொழில் வல்லார், கைத்தொழில்வல்லார், பண்டை நூல்வல் லார் முதலிய பலகலை வல்லாரது உதவியைத் துணையாகக்கொள் ளின் மேலை நாட்டுச்சொற்களினு மிக நயமான தமிழ்ச்சொற் கள் ஏராளமாகக் கிடைக்கப்பெறும். 'காய்' என்ற சொல்லை பழுக்காதபழம் என்று பொருள்படும் 'unripe fruit' என்றுஞ் சொற்ருெடரால் வழங்குதல் எவ்வளவு சுற்ருன நீண்டமுறை யாகும் என்பதை உற்றுநோக்குக. 'Centre of gravity' என்ற

சொற்றொடர்ப் பொருளைக் குறிப்பதற்கு 'எண்' என்ற ஒரு சொல் கம்பியர்களால் வழங்கப்படுகிறது. 'Prejudice' என்ற ஆங்கிலச்சொல்லிற்கு நேர் மொழி 'முன்ன முடிவு' 'முன் முடிவு' என்பது. இதனைத் திரு. இராமலிங்க சுவாமிகள் வழங்கியுள்ளாரெனத்திருவனந்தபுரம் திருவாளர் இலக்குமண பிள்ளையவர்கள் காட்டினர். பிறவு மன்ன,

இனி, தமிழிற் புதிதாகச்சொல்லாக்கமியற்றக் கருதுவோர் மேலை நாட்டுச்சொற்கள் எவ்வாறெழுந்தன வென்பதைக் கருதாது, குறித்த பொருள் முழுவதையும் ஒரு சிறுசொல்லி லுணர்த்த வேண்டுமென்றெண்ணி, நெடுஞ்சொற்றொடர்களை மேற்கொள்ளுகின்றார். இது 'சுருங்கச்சொல்லல்' என்ற அழகிலாதொழிதற் கேதுவாம். Chemistry என்பது 'ஊற்றுதல்' என்ற பொருளுடைய ஒரு சொல்லடியாகப் பிறந்தது. அச்சொல் அவ்வறிவியல் நூலின இலக்கணத்தை உணர்த்தாவிடினும் இடுகுறியாக அந்நூற்கு வழங்குதல் காண்க. தமிழில் இதைப்பார்க்கிலும் நயமான சொற்கள் எளிதிலமைத்தல் கூடும். பெயர்களாக அமைகின்ற சொற்கள் தாம் குறிக்கின்ற பொருளின் இலக்கணத்தின் ஒரு பகுதியைச் சுட்டினும் போதுமானது. அவற்றிற்கு விளக்கம் நூலுட் செம்மையாகத்தந்து, அவற்றை அப்பொருளையே குறிக்கப் பயன்படுத்துவோமாயின், தெளிவிற்கு ஊனம் ஏற்படாது. 'Geography' என்பதைக் குறிப்பதற்கு 'ஞால நூல்' என்ற சொற்றொடரை வழங்குதல்தக்கதே. 'Geology' என்பதற்கு 'நில நூல்' என்றசொற்றொடரை வழங்குமிடத்து, எவ்விடத்திலும் அச்சொற்றொடரை, அந்நூலைக் குறிக்கவே பயன்படுத்த வேண்டும். சில சமயங்களில் 'நிலநூல்' என்பதை 'Geography' என்பதைக் குறிப்பதற்கும், 'ஞால நூல்' என்பதை Geologyயைக் குறிப்பதற்கும் வழங்காமலிருப்பின், அதுவே உரைத்தெளிவிற்குப் போதுமானது. அவ்வாறே 'Physics' என்பதற்கு 'பூத இயல்நூல்' எனவும் 'Chemistry' என்பதற்கு 'பூதக்கலவைநூல்' எனவும் வழங்கலாம். இவற்றை மாற்றிவிடுதல் கூடாது. 'பூதம்' என்ற சொல் ஆசிரியர் திருவள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது.

'பூதங்களைந்தும் அகத்தே நகும்' என்றது காண்க, அது 'பூத்தல்' (=உண்டாதல்) என்பதடியாகப் பிறந்த தமிழ்ச்சொல்லாக இருத்தற்பாலதே. 'Chemistry' என்பது பூதக்கலவையை மாத்திரமன்றித் தனிப்பொருள்களைப் பற்றியுங் கூறுவதேயெனின், தனிப்பொருள்களில்லாது கலப்பு எவ்வாறு நிகழும். 'கலவை' என்பதனுள் அவை யடங்கும். 'Elevator' என்பதற்கு, 'பொருள்களை மேலே உயர்த்துங்கருவி' என்றெழுதினால், அது வெற்றெனை விரித்தலாகும். 'தூக்கி' என்ற தமிழ்ச்சொல்லே வழங்கினாற்போதும். 'Canyon' என்பதற்கு 'செங்குத்தான கரைகளை யுடைய ஆழமான ஆறு' என்று தமிழிற் கூறுவது தமிழ்ச்சொல்லாற்றலின்மையை உணர்த்தும். 'நிவப்புக்கரையாறு' என்றாற் போதுமானது. பிறவுமன்ன.

இஃதென் சொல்லியவாறோ வெனின், அறிவியல் நூற்சொற்களைத் தமிழில் தழுவக் கருதும் அதிகாரிகளும், பிறரும் தமிழ்ச் சொல்லாக்க முறைகளை அறியாது இடர்ப்பட்டுத் தமிழ்க்கு ஊனம் விளைவிக்கும் வழியிற் செல்லுதலால், இந்நன் முயற்சி செவ்விதிற் நிகழ்ந்து தமிழ்க்கு வளமும் ஆக்கமும் மேம்படுதற் பொருட்டு ஆங்கிலம்வல்ல தமிழறிஞரைத் தமிழ்ப் பெருஞ் செல்வர்கள் இதன்கண் ஊக்கி அவர்களால் அம் முயற்சி கைகூடும் வண்ணம் செய்யவேண்டிய ஏற்பாடுகளை விரைவிற் செய்யவேண்டும். அன்றெனின், அதிகாரிகளின் துணைக் கொண்டு நமது மாணவர்களனைவரும் கற்குங் கலாசாலைகளில், அறிவியல் நூற்கருத்துத் தெரிக்கும் ஆரியச்சொல் வெள்ளம் பெருக்கெடுத்துத் தமிழ்க்கரைகளிலிருந்து அவர்களைக் குழப்ப மொழிக்கடலிற் கொண்டு தள்ளிவிடுதல் கூடும். ஆதலின், நம்மவர்கள் இப்போதாவது இம்முயற்சிக்கண் விழிப்புடன், தமிழ்நயத்தைப் பாதுகாக்கப் புறப்பட்டு வெற்றியடைக என்பதே.

பிணியாளி

(அ. சிதம்பரநாதன். B. A.)

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.’ இக்குறைவற்ற செல்வம் வாய்க்கப் பெறுவார் உலகில் வெகு சிலரே. மனிதனுக்குப் பழவினையாலும் உணவு செயல்கள் இவற்றின் ஏதுக்களாலும் பிணி யேற்படுகிறது. பழவினையால் வரும் நோய் அவ்வினை கழியுங்கால்தான் தீருமென்று சொல்லுவர். அஃதன்றி உணவுந் தொழிலும் மிகுவதாலும் குறைவதாலும் ஏற்படக்கூடிய நோய்கள் மருந்தாற் போக்கற்பாலன. பிணி வருமுன்னே காக்கச் சில விதிகளுமுண்டு. அவைகளுட்சில:—தான் முன்னருந்தியது அற்றதைக் குறிகளாற் கண்டு பின் அறக்கூடிய அளவறிந்து உண்ணல். மாறில்லா உணவுகளைக் கொள்ளல். தன்யாக்கை வலிமைக் கொத்த வினைகளை ஒத்த காலத்திற் செய்தல்.

இவ்விதிகளுக்கு மாறாக நடப்பதாலும் பழவினையாலும் பிணியாற் பிடிக்கப்படுவோர் நிலைமையை நோக்குவோம். அவர் தம் வாழ்க்கைப் போக்கில் மகிழ்ச்சி தரத்தக்க உணர்ச்சிகளும் வெற்றிக் குறிப்புகளும் நோய் வந்துழி தடைக்குள்ளாவனவே யன்றி மறைவனவாகவும் சொல்லலாம். அவர் படுத்த படுக்கையாகக் கிடக்கின்றனர். அவரது எண்ணங்கள் உவகை யென்னு மிடத்திற்குப் போகும் பாதை வழிச் செல்லத் தயங்குகின்றன. உலகத்தில் நிகழும் வேலைகளைப்பற்றி அவர்க்குக் கவலையில்லை. மனிதர்கள் என்னென்ன தொழில்களில் ஈடு படுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள அவராலியலவில்லை. வைத்தியன் வந்து பார்க்கும் பொழுது வைத்தியம் என்பதாக ஒரு தொழில் இருக்கிறதென்ற நினைவுண்டாகிறது. வீட்டைப்பற்றிய கவலை அவர்க்கு இல்லை. ஏதோ உள்ளே முணு முணுவென்று கேட்கும் ஒலி வீட்டிற்குள் ஏதோ சிறு வினைகள் செய்யப்படுகின்றன என்று அறிவிக்கின்றனவேயன்றி அவ்வினைகள் யாவை யென்றறிந்து கொள்ள அவர் முயற்சிப்பதில்லை. பஞ்சு மெத்தை மீது

நடத்தல் போன்று ஓசையின்றி மாடிமீதேறிச் செல்லும் வேலையாட்கள் எதற்காக அங்கு செல்கிறார்கள் என்பதைக் குறித்து அவர்கள் அறிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. வீட்டுக் கதவைத் தட்டும் ஓசை கேட்டும் யாரங்கே என்று கேட்காது கொன்னே இருக்கும் நோயாளி தட்டினவர் உள்ளே வந்தபின்கூட 'அவர் யார்' என்று அறிந்துகொள்ள விரும்பவில்லை. யார் யாரோ தனது உடல் நிலையைப்பற்றிக் கேட்டுச் செல்கிறார்கள் என்ற பொதுவான செய்தி யொன்றே அவர்க்குப் போதுமானது.

பிணியானது மனிதனைத் தந் நலங் கருதுவதிற்றீரனாகச் செய்து விடுவது என்ன விநோதம்! தான் நோய்நீக்கப் பெற வேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர வேறெவ்வெண்ணமும் அவனுக்கு உண்டாதலில்லை. தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டும் அழுதுகொண்டும் முணுமுணுத்துக் கொண்டும் இருக்கும் பிணியாளி தனக்கு எவ்வழியில் நன்மை செய்து கொள்ளலா மென்றெண்ணிய வண்ணம் இருக்கிறான். அவனது துன்புறும் அங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனியாட்கள் தன்னுடம்பிலேயேயிருந்து துன்பந் தருவது போன்றிருக்கிறது. அவன் இரவெல்லாம் தலைநோயாற்றுன்பப்பட்டதைக் குறித்து நினைப்பதிலும் தனது விரல்களெல்லாம் மெலிந்து போயிருப்பதைக் குறித்து வருந்துவதிலும் காலத்தைக் கழிக்கிறான்.

அவனிருக்குமிடத்தில் ஓசை குறைக்கப் படுகின்றது. எல்லோரும் குசுகுசென்று பேசிக் கொள்கிறார்கள். அரவமின்றி நடக்கிறார்கள். வீடு முழுவதும் அவனைப் பற்றியே பேச்சு; அவனைப்பற்றியே நினைவு. அவனோ படுக்கையில் இப்படியும் அப்படியும் புரளுகிறான். வலதுகைப் பக்கம் படுக்கிறான்; இடது கைப்பக்கம் படுக்கிறான்; முகத்தை மேலே வைத்துப் படுக்கிறான்; முகத்தைக் கீழே வைத்துப் படுக்கிறான். குளிரைத் தடுக்கத் துணிகளைப் போர்த்துக் கொள்கிறான். சற்று நேரத்தில் அவைகளைக் களைந்து விடுகிறான். தலையணையைப் புரட்டிப் புரட்டி வைத்துக் கொள்கிறான். அரசனுக்குப் போன்று அவனுக்குப் படுக்கையும் தலையணையும் தட்டியுங் கொட்டியு

மாற்றியும் போடப்படுகின்றன. அரசியல் வாதியைவிட அவன் பக்கங்கள் மாறுகிறான். சிலசமயங்களில் அவன் பொறுமையெல்லாம் போய்ச் சின முண்டாகிறது.

அதுபோன்ற சினத்தைச் சில நோயாளிகள் வீட்டிலுள்ளார் பாற்காட்டுவர். சிலர் கடவுளைக் குறை கூறுவர். வேறு சிலர் தாம் செய்த வினையை யெண்ணி நோவர். பின்னுஞ் சிலர் தாஞ் செய்த அட்டூழியங்களை நினைத்து வருந்துவர். வந்த நோய் கூற்றுவனையுமுடன் கொண்டு வந்து விட்டதோ வென வஞ்சி அறவழிகளிற் பொருளைச் செலவு செய்ய வேண்டுமென்று நினைப்பாரு முண்டு. இவ்வச்சமே பிணியாளிகள் உயிர் விடுந் தறுவாயில் அறச் செயல்களுக்காக எழுதி வைக்கும் பணத் தொகைக் கேதுவாகும். பிணி வந்தக்கால் நல்லவை யல்லவை செய்ததற்கு வருத்தமும் நல்லவை செய்யவேண்டு மென்ற அவாவும் ஏற்படுகின்றன. கடவுளென்று ஒருவருண்டென்ற எண்ணமும் அப்பொழுதுதான் பலருக்குத் தோன்றுகிறது. பிணி, உள்ளஞான்று துன்பந் தருவதாகத் தோன்றினாலும், அதனாற் சில நன்மைகளு மேற்படுவதாற்றான் கடவுள் மக்கட்குப் பிணியையுந் தருகின்றனர்போலும். குட்டநோய்பெற்ற நக்கீரர் செருக்கொழிந்ததும் வயிற்று நோய் பெற்ற சுந்தர பாண்டியன் நன்மதம் சேர்ந்ததும் யாவருமறிந்ததே. ஆனால், பிணிப்பட்டுழி ஒருவற்கு வரும் நற்புத்தி பிணியகன்றபின் மாறிவிடாதிருக்கும்படிச் செய்தல் எளிதன்று; ஆயினும் எளியதல்லா வொன்றைச் செய்தலால் வரும் பெருமையைக் குறித்தாவது பிணியாளிகள் பிணி நீங்கியபின் நன்னெறிக் கண் செல்வாராக!

கண்ணப்ப நாயனார்

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்]

திருக்காளத்தி மலையின் அடி வாரத்திலே பொத்தப்பி நாடு பலவளமும் சிறந்து ஓங்கியிருந்தது, அந்த நாட்டின் தலை நகர் உடுப்பூர் என்பது. அந் நாட்டிலே வேடுவரே மிகுந்திருந்தனர். அவர்களுக்கு அரசர் நாகன் என்பவர். அவர் தத்தை எனப் பெயரிய மங்கையாரோடு இல்லறம் பூண்டு அரசாண்டு வந்தார்.

அவர்களுக்கு நெடுநாள் பிள்ளைப்பேறு அரிதாயிற்று. அவர்கள் மலை நாட்டுத் தெய்வமாகிய முருகப் பெருமானை வழிபட்டு மெய்யன்போடு நோற்றிருந்தனர். முருகக் கடவுள் திருவருள் செய்தார். அத்தவப் பயனால் அவ்வம்மையார் ஓர் அருமைக் குழந்தையைப் பெற்றெடுத்தார். அப்பிள்ளை திண்ணென்று இருந்தது. அதனால் அம்மகனுருக்கு இரு முதுகுரவரும் திண்ணனார் எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர். திண்ணனார் திடமுற வளர்ந்து இளவரசுப் பட்டம் பெறும் பருவத்தை யடைந்தார்.

அரசர் தமது மைந்தருக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார். திண்ணனார் வேடர் பலர் புடை சூழக் கன்னி வேட்டையாடக் காட்டை யடைந்தனர். கன்னி வேட்டையாவது முதன் முதல் ஆடும் வேட்டை. அவர் புலி, கரடி, யானை முதலிய பல கொடிய உயிர்களைக் கொன்றார். ஒரு பன்றி அவர் கையில் அகப்படாமல் மிக வேகமாக ஓடிற்று. அவர் அதைப் பின் தொடர்ந்து சென்றார். நாணன், காடன் என்ற இரு வீரரே அவருக்குத் துணையாகத் தொடர்ந்து வந்தனர். கடைசியில் அவர் அப்பன்றியைப் பற்றித் தமது ஈட்டியால் குத்தி அதைக் கொன்றார். அவர்கள் அப்பன்றியை வதக்கித் தின்று இளைப்பாறி ஊருக்குத் திரும்ப எண்ணினர்.

அவர்கள் தண்ணீர் உள்ள இடம் தேடிப் பொன் முகரியாற்றை அடைந்தனர். திண்ணனார் தீ உண்டாக்கிப் பன்றியை

வதக்குமாறு காடனை அங்கே நிறுத்தி நாணனைத் தம்முடன் அழைத்துக்கொண்டு அம்மலைமேல் ஏறினார். அவர்கள் அம்மலையின் உச்சியை அடைந்தனர். அங்கே திண்ணனார் தம் முன்பு சிவலிங்கப் பெருமானைக் கண்டார். கண்டு பேரன்பு கொண்டு ஓடிச் சென்று அக்காளத்தியப்பரைத் தமது மார்போடு தழுவிக் கொண்டார். "கடவுள் எப்படி அங்கே ஒரு துணையும் இல்லாமல் உணவு கொடுப்பாருமின்றித் தனியே இருக்கின்றார்"? என எண்ணிய திண்ணனார் அவரைத் தம்மோடு ஊருக்கு அழைத்தார். அவர் பேசாதது கண்டு அவருடனேயே தங்கியிருக்கத் துணிந்தார்.

காளத்தியப்பர் பசித்திருத்தலைக் கண்டு அவருக்கு உணவு கொண்டுவர எண்ணி அவர் கீழே இறங்கிப் பொன்முகரிக் கரையை அடைந்தார். அங்கே அவர் அப்பன்றியை வதக்கி, சுவை பார்த்து நல்ல சுவையுள்ள புலாலை எடுத்துக்கொண்டு, கடவுளை முழுக் காட்டத் தமது வாயிலே ஆற்று நீரை மொண்டு கொண்டு, அப்பிரானுக்கு அழகு படுத்தப் பல மலர்களைப் பறித்துத் தமது தலையிலே செருகிக் கொண்டு மலையின் உச்சியை நோக்கி விரைவாக ஓடினார். அவருடைய செயலைக் கண்ட நாணனும் காடனும் அவருக்குத் தெய்வப் பித்தம் பிடித்து விட்டதென்று தீர்மானித்து அச்செய்தியை அரசருக்குச் சொல்ல விரைந்தனர்.

திண்ணனார் காளத்தியப்பர் முன் சென்று பணிவுடன் அவருடைய தலையிலே தமது வாயிலிருந்த நீரை ஊற்றி, தமது தலையிலிருந்த பூக்களையெடுத்துச் சூட்டி, முன் தாம் கொண்டுவந்த புலாலுணவைப் படைத்தார். இவ்வாறு அவர் ஐந்து நாட்கள் செய்து அன்பு மீதூர அன்பே ஒரு உருவமாகிப் பிரானை விட்டு நொடிப் பொழுதும் நீங்காமல் காவல் காத்து நின்றார். உணவு தேடிப் போகும் நேரம் தவிர அவர் வேறு எங்கும் அகலார்.

திருக்காளத்தியப்பரைப் பூசை செய்யும் அடியார் புலால், எலும்பு முதலியன அங்கே சிதறிக்கிடப்பதைக் கண்டு மனம்

கொந்து "இத்தகைய தகாத செயல் செய்வாரும் உளரோ?" எனப்புலம்பி "இறைவரும் இதற்கு இடங்கொடுத்து மனம் இசைந்திருக்கின்றனரே" என இடையீடில்லாத சிந்தனை கொண்டார். கடவுள் அவருடைய கனவிலே தோன்றி, "அன்பனே! இதனைச் செய்வோன் அன்பே உருவானவன். நாளை நீ எமக்குப்பின்னால் அவன் காணாத இடத்தில் வந்து ஒளித்திரு. அவனுடைய பேரன்பை உனக்குக் காட்டுவோம்." என்று மொழிந்தனர். அவ்வடியார் மறுநாள் பிரானாரை வழிபட்டு உண்மை காண அவருக்குப் பின்னால் மறைந்திருந்தனர்.

திண்ணனார் ஆறும் நாளாகிய அன்று உணவு கொண்டு வந்தார். வந்தவுடன் அவர் காளத்தியப்பருடைய வலது கண்ணிலே இரத்தம் வடிவதைக் கண்டு நெஞ்சம் துணுக்குற்றார். இத்தீமையைச் செய்தார் யாரெனக்காண ஓடினர்; பல பச்சிலைகளைக் கொண்டுவந்து இரத்தம் வடியும் கண்ணிலே பிழிந்தார்; ஒன்றாலும் செந்நீர் வடிவது நிற்கவில்லை. அதனால் அவர் பட்ட துன்பத்திற்கு ஓர் அளவே இல்லை.

சிறிது நேரம் அவர் சிந்தனையில் ஆழ்ந்தார். அவருக்கு "ஊனுக்கு ஊன் இடல்" என்னும் உண்மை மொழி தோன்றிற்று. உடனே அவர் தமது வலது கண்ணைத் தோண்டி யெடுத்து இரத்தம் வடியும் கண்ணிலே அப்பினார். அக்கணமே இரத்தம் வடிவது நின்றது. அது கண்டு அவர் மட்டிலா மகிழ்ச்சியடைந்து துள்ளிக் குதித்து ஆடிப் பாடினார்.

அப்போது கடவுளுடைய இடது கண்ணிலிருந்து இரத்தம் வடியத் தொடங்கிற்று; அதைப் பார்த்த மாத்திரத்திலே மறுபடியும் கவலை தோன்றிற்று. ஆனால் அவர், "இனி யான் இதற்கு அஞ்சேன். ஏனெனில் மருந்து கை கண்டேன்" என்று கூறிக் கொண்டு தமது இடது கண்ணைப் பிடுங்கத் தொடங்கினார். அக்கண்ணையும் பிடுங்கி விட்டால் காளத்தியப்பருடைய இடது கண்ணை அறிவது கடினமாய் விடும். அதனால் அவர் அடையாளம் கண்டு பிடிப்பதற்காகத் தமது காலைத்தூக்கி அக்கண்ணுக்கு அருகே ஊன்றிக் கொண்டு அப்பால் தமது இடது கண்ணைப் பறிக்கத் தொடங்கினார். ஈடும் எடுப்பு மற்ற இத்த

கைய அன்புச் செயலை யாரே செய்தார்! உடனே பெருமானார் தோன்றி அவருடைய கையை அம்புடன் பிடித்துக் கொண்டு, "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!" என அருளுரை கூறி அவரைத் தமது அருகிலேயே வலது பக்கத்தில் வைத்துக் கொண்டு என்றும் குன்றாப் பேரின்ப வாழ்வைத் தந்தருளினார். செய்வதற்கு அரிய இத்தனை அன்புச் செயல்களையும் மறைந்திருந்து கண்ட அடியார் கடவுளுடைய திருவருளைப் புகழ்ந்து கண்ணப்ப நாயனாரை நாடோறும் கும்பிட்டிருந்து திருவருள் பெற்றார்.

திருஞான சம்பந்தர்-செந்தமிழ் நாடகம்.

[திரு. S. முத்துக்குமாரசாமியா பிள்ளையவர்கள்)

திருச்சிற்றம்பலம்.

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம் மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநாயகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற்கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே." சம்பந்தர்.

"பண்டைவல் வினையினாற் பாயு டுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடுந்
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்"
கந்தபுராணம்.

முதல் அங்கம்—முதற்காட்சி.

இடம்:—மதுரைக் கோவில். மீனாட்சி யம்மன் திருமுன்.
காலம்:—முற்பகல்.

நடர்:—மங்கையர்க் கரசியார், குலச்சிறையார், வடநாட்டு மறையவர் முதலியோர்.

மங்கையர்க்கரசியார்;—(தன் தோழிமார்களுடன் கோவில் புக்கதும், அங்கு அமைச்சர் குலச்சிறையாரைக் கண்டு உரையாடல்).

அருட்கல்வி எற்கு அருளிய அமைச்ச! எந்தையே போன்றாய்!

சைவத்திற்கு நற்காலஞ் சார்தலும் உண்டோ? திருநீறு இடுவது கூட, மறைவாய்ச் செய்ய நேர்ந்ததே. நாடெலாம் புகழும் இக்கோவிலுக்கு, நாடோறும் வணங்க வருவாரும் குறைந்ததே. தங்கள் தேறுதல் மொழியால் திருவருள் கூடும் கூடும், என்று இதுவரைப் பொறுத்தேன். என் மனம் வரவரத் தளர்வுறுகின்றது. நம் மன்னர் பெருமானே, வஞ்சம் மிக்க அமணர் வலைப்பட்டார். "கரும்பிருக்க இரும்பை மென்று," "விளக்கிருக்க மின்மினித் தீக்காய்வார்" போலும் வருந்துகின்றார். என் செய்வது? இன்று ஞாயிற்றுக்கிழமை. மாத சிவராத்திரி. இக்கோவிலில் கூட்டமே இல்லையே. அயலூரிலிருந்து வந்தவர் சிலரே, வருதலும் போதலுமாக இருக்கிறது.

குலச்சிறையார்:--(மங்கையர்க் கரசியார்க்கு மறுமொழி கூறல்).

சிவமணங் கமழும் அருளுறை அம்மையே!

"ஊழிற் பெருவலி யாவுள" மனங் கவலற்க. நம் நீண்ட புகழ் மாறனார் சைவம் மாறுவர் விரைவில். நம்பர் அருளும் கூடும். நற்குறிகள் பல கண்டேன். உறுதி உளையிருந்தே கூறிக் கொண்டிருக்கின்றேன். ஒரு சமயத்திலும் பற்றிலாரையும், ஒன்றே பிடித்து, மற்றேதுங் கேளேன், என்ற மனப் பிடிவாதமுடையாரையும், நல்வழிப் படுத்த இயலாது. நமது பெருமானார், அவ்விரு திறத்தாரோடுஞ் சேர்ந்தாரில்லை. நடு நிலை திறம்பா வீரர். நிறைந்த கல்வி கேள்வி யுடையர். அன்பிற் சிறந்துளார். காட்சிக் கெளியர். கடுஞ் சொல்ல ரல்லர். அமணர்பால் கொல்லாமை மறைந்தொழுகலை, அறியாது நம்பினார். அறியின், அமணர் பாடு என்னுமோ? நாம் கோவில் வருதல் மறுதிருக்கும் இவ்வொரு செயலே, நமது மன்னர் நன்னீதி யுடையார், என்

பதைத் தெற்றென விளக்க வில்லையா? என்றைக்காவது நம்மை வற்புறுத்திய துண்டா? அமணர்கள் வெளியிற் செய்யும் அட்டூழியங்களைத் தென்னவர் தெரியார். தெரிவதொரு காலமும் நெருங்கிற்று. அம்மையே, உளக்கவல் விடுக,

இருவரும் உட்சென்று 'மீனாட்சி' யம்மனை வணங்கல்.
ஆதிசைவர் திருநீறு கொண்டு கொடுத்தல்.

பற்பல அயலிடமிருந்து வந்த அடியார்களில் ஒருவர் சிவப் பழமாய், நீறுபூத்த மேனியராய், கண்டி பூண்டு அன்புபொதி உள்ளத்தோடு வரக்கண்டார்கள்.)

முதல் அங்கம் இரண்டாங் காட்சி.

இடம்:—கோவில்.
காலம்:—முற்பகல்.
நடர்:—மேற்குறித்த மூவர் முதலியோர்.

குலச்சிறையார்:—(சைவ மறையவரைப் பார்த்துக் கூறல்.)
சிவப்பொலிவு சிறந்து தோன்றுஞ் சீரிய மறையோய்!

எங்கிருந்து வருகின்றீர்? எவ்வூர் நும்மது? நும்பக்கல் புதுமை ஏதேனும் உண்டோ?

மறையவர்:—

அமைச்சர் பெரும! வடபுலத்துள்ளேன். மூர்த்தி தலந் தீர்த்தம் போதல் எண்ணி இடந் தொறுஞ் செல்கின்றேன். மூன்றும் கூடிய இங்கு, விருப்பொடு வந்தேன் நேற்றிரவு. இங்கு வந்தது முதல், தூக்கமே இல்லை. மிக்க மனக்கவலை யடைந்தேன். எல்லா நாட்டிற்கும் வழிகாட்டியாய் இருந்த, இந்தத் தனிச் சைவ நாடா, இப்படி மாற நேர்ந்தது. அதிலும் தலை நகரமாய், இறைவனே நேராக அரசு புரிந்த, இந்த மூதூரா, இப்படிக் களைமாற வேண்டும். "பாண்டிநாடே பழம் பதியாகு" மென ஆன்றோர் மொழியுமா, பொய்க்கவும் நேர்ந்தது. நினைக்கும்போதெல்லாம் என் நெஞ்சம் பதைக்கின்றதே. சொல்ல ஒன்றுந் தோன்றவில்லை. நிற்க, மெய்யன்புடைய அமைச்சரேறே எங்கள் வளவனார் திருமகளாரே, ஒன்று கூறுதும். கேட்டதும் உங்கள் மனம் களிபேருவகை எய்தும் என்பதில் ஐயமில்லை,

"சீகாழியில் சைவ மறையவர் ஒருவருளர். பெயர், சிவபாத விருதயர். சிவனடி மறவா அன்பர். அமணரின் அலக்கண் அகற்ற எண்ணினர். இருள் ஓட்டி அருள் நாட்ட, வலியுடைய பிள்ளை எண்ணி வரங்கிடந்தார். எண்ணியர் திண்ணியராக லின், தோன்றினர் ஒரு செல்வர். ஈராண்டு முடிந்து மூன் றாம் ஆண்டில், தோணியப்பர் அம்மையுடன் விடைமேல் வந்து, நமது தவப் பிள்ளையார் அழுகைமாற்றி, நங்கை பாலொடு ஞானமுந் திரட்டிச், செம்பொற் குருமணி வள்ளத் தேந்திக் கொடுத்தனர். அப்பிள்ளையாரும் வாங்கி யருந்தினர். உடன் எண்ணிறந்த வேதம் ஆகமம் இவைபற்றி வரும் கலைகள் யாவும் ஓதாது உணர்ந்தனர். யாவருக்குந் தந்தை தாய் எனும் இவர்இப் படி அளித்தா ராவதனால், "ஆளுடைய பிள்ளையாராயினர்". "ஞான சம்பந்தரு" மாயினர். ஞான வாணி நாவினிலுற்றாள். வம் பந்த மறைகளெல்லாம் அருந்தமிழாகக் கூறுகின்றார். கரும்பில் சக்கை நீக்கிச் சாறடு கட்டிபோலத் தெளிவிலா மறைப் பொரு ளைத் தெள்ளிக் கொடுக்கின்றார். தேனுண் வண்டுபோல், "கொன்றை வேணியர்" இடந்தொறுஞ் செல்கின்றார், பசும்பொற் றாளம், சிவிகை, பந்தர், இன்னன அருளிறைக் கொடுத்து வைத் தார் போலப் பெற்றனர். திருவீழி மிழலையில் வற்கடம் தொலைக் கப் படிக்காசு பெற்றார். திருமறைக் காட்டில், கோவிற் கதவை, திறந்து அடைக்கப் பாடினார். பரன் உறை பதிதொறும் செல் கின்றார். இங்கும் வணங்க வரலாம்"

குலச்சிறையார்: — எங்கள் செவிப்புலம் நிரம்ப, ஆரமுதம் போன்ற மொழி கூறிய அன்பரே, இன்றே நாங்கள் உய்ந்தனம்.

மங்கையர்க்கரசியார்:—அமைச்சரை நோக்கி —

அமைச்சரே ! நம் நாடு நலனுறும் காலம் நண்ணிற்று. இது பொழுதே, தக்க அறிவுடையரை ஏவி, "ஆளுடைய வள்ள லாரை" அழைக்கச் செய்க.

குலச்சிறையார்:—(சைவ மறையவரைப் பார்த்து)

ஒழுக்கமே உயர்வாய்ப் பெற்ற மேலவ !

எங்கள் வேண்டுகோள் கண்டு, ஒரு குறிப்பு அனுப்புகின் றோம். கூடுமாயின் தாங்களும் உடன் போக இசையின் நலம்.

இரண்டாம் அங்கம்—முதற்காட்சி.

இடம்:—திருமறைக் காட்டில் ஞானசம்பந்தர் மடம்.

காலம்:—முற்பகல்.

நடர்:—பாண்டித் தூதுவர், மடத்துக்காவலர், ஞானசம்பந்தர், அடியார்கள்.

பாண்டித்தூதுவர்:—ஞானசம்பந்தர் மடத்துக் காவலரை நோக்கி,
ஞானக் காவலாய் அமர்ந்த பெரியீர்,

நாங்கள் பாண்டி மதுரையிலுள்ளோம். அங்கு அமணிருள் சூழ்ந்தது. எங்கள் மன்னரும் அவ்வலைப்பட்டார். அன்னவர் இன்னுயிர்த் துணைவியாம் எங்கள் அன்னை "மங்கையர்க் கரசியாரும்", அன்புடை அமைச்சர் "குலச்சிறையாரும்" சைவப் பயிரை வாடுறாது வளர்த்து வருகின்றனர். அருட்பாலுண்ட "ஆளுடைய பிள்ளையார்" வரலாறு கேட்டனர். உடனே அங்கு அழைத்துவர எம்மை இங்கு ஏவினர். ஞானத்தலைவரிடம் எங்கள் வரவு கூறி, விடைபெற்றுவர வேண்டுகின்றனம்.

காவலர்:—அன்புடையீரே, அமருங்கள் இங்கு. யான் விடை கொண்டு வருகின்றேன். (என்று பிள்ளையார்பால் சென்று அடிவணங்கி நின்று)

சைவ மறை தெரிக்கும் எங்கள் தலைவ !

பழம்பதியான பாண்டி நன்னாடு அமண் வழிப் பட்டதாம். மன்னரும் அதனைப் போற்றவும் நேர்ந்ததாம். இதனைப் பொறாது, நம் வளவர்கோன் மகளார், தென்னர் கொற்றவர் தேவியாரும், குலச்சிறையாரும், ஏவப் பொற்கழல் பணிய வந்தோம், எனச் சிலர் வந்திருக்கின்றார். விடை வேண்டுகின்றனர்.

ஞானசம்பந்தர்:—(அகமலர்ந்து), அழைத்துவாரும் உடனே,
(காவலர் தகவுடைத் தூதரை யழைத்துத் திருமுன் கொண்டு விடல். தூதர்கள் செல்லும் போதே, தலையினால் வணங்கி நின்றனர்.)

ஞானசம்பந்தர்:—(தூதுவரை அன்புடன் அமரச் செய்தல்.)
தமிழ் குழகன் தாள் போற்றும் அன்புடையீர்,

சைவப் பயிர் தழைக்க வந்த மங்கையர்க்கரசியார்நலமா?
அன்னவர் தமக்கு மானக் குன்றான 'குலச்சிறையார்' நலமா ?

தூதுவர்:—தமிழ் மறை தந்த பெரும,

அமணர்களால் கன்னிநாடு கட்டழிந்தது. இழிந்தது. தங்கள் மன்னரும் அவர்கள் மாயத் தழுந்தினர். மாதேவியாரும், வென்றிக் குலச்சிறையாருங் கூடி, இந்நிலை புகலி வேந்தர்க்கு இயம்பும் என்று இறைஞ்சி விட்டார், இவ்வோலையும் கொடுத்தனர். (ஓலையைக் கொடுத்தல்)

ஞானசம்பந்தர்:—தன்னுடன் இடையறாது உறையும் "சம்பந்த சரணாலயரை" நோக்கி, அவ்வோலைச் சுருளை வாங்கிப் படிக்க அருளினர். அவரும் அப்படியே வாங்கிச் சுருள் நீக்கிப் படித்தார்.

சம்பந்த சரணாலயர்:—ஓலை படித்தல். திருச்சிற்றம்பலம்.

"வெங்குரு வேந்தர் அடிபணிந்து, அடியேன், குலச்சிறை விளம்பும், விண்ணப்பம்,

இங்கெழுந்தருளிச் சமணிருள் ஒதுக்கி, எம் இறை மகற்கு நீறளித்துப்,

பொங்கிரும் பணைசூழ் தென்றமிழ் நாட்டைப், பூதி சாதன வழி நிறுத்தி,

எங்களைக் காக்க"—இணையிலா இன்பே, எங்கள் தவக் கொழுந்தே——

சிவனடியார்கள்:—எங்கள் வாழ் திருவே,

நம்பர் பாதம் நண்ணாத நாணிலமண் குண்டர்தமை, வென்றருளி,

வெண்ணீறு வேந்தனையும் இடுவித்து, அங்கு நின்ற செயல், சிவனடியார் செயலே யாக, நினைந்தருள வேண்டும்.

இரண்டாம் அங்கம்—இரண்டாங் காட்சி

இடம்:—திருமறைக் காட்டுக் கோவில் கோபுரவாயில்.

காலம்:—முற்பகல்.

நடர்:—திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அடியார்கள் தூதுவர்கள், முதலியோர்.

திருஞானசம்பந்தர்:—(அப்பருடன், கோவில் சென்று வணங்கி மீளுங்கால் கோபுரவாயிலில் இருந்து கூறல்.)

அருள் வடிவு இதுவெனக் காணும் அப்பரே,

தமிழ்நாடு சமண் உற்றதாம். "நெடுமாற" மன்னரும் மயங்கி அதன் வழிப் பட்டனராம். அன்பு நிறைந்த குலச்சிறையாரும், அம்மை மங்கையர்க் கரசியாரும் வாட்ட முற்றனராம். நம் வரவு தெரிந்து, மகிழ்ந்து, அழைத்துவரத் தூதுவர் அனுப்பினர். போதல் துணிந்தேன்.

திருநாவுக்கரசர்:—அம்மம்ம ! சமணர் சூழ்ச்சி சண்டாளம் (துரோகம்) அன்றோ ! பெருந்தன்மை சிறிதும் பேணுதலின்று. தன்னூலளவன்றி மேலது கொள்ளார். முறட்டுக் குணமே மலிந்து தோன்றும். பிள்ளைமைப் பருவம் உன்னார் அன்னார். கண்ணோட்டம் என்பதைக் காணலரிது. கொண்டது விடாக் கொடிறு போல்வர். பேதையர் வழியே மன்னரும் உற்றார், எம் சைவ நன்மணியே, நீர் போதற்கு என் மனம் இசைகின்றதில்லை.

திருஞானசம்பந்தர்:—சைவ மெய்யன்பரே,

"திணிந்த அமணிருள் சூழ்ந்த அவ்விடை, எல்லையிலா நீறு போற்றும் இருவரையுங் காணுங் கருத்துடையேன். அங்கு நான் சென்று தீங்கு புரி யமணர் நிலை யழிவித்துச், சைவநெறி பாரித்தன்றி, ஒன்றுஞ் செய்யேன். ஆணையுமது,"

திருநாவுக்கரசர்:—அன்பமர் பிள்ளாய்,

போமாறு துணிதல் தகாது. அவ்வமணர் கொடுஞ்செயல் செய்ய அஞ்சார். அவர்களோடு பன்னாட் பழகி, குருவாய் உற்ற என்னைப் படுத்திய பாடு எண்ணவும் படுமோ. நஞ்சிட்டும், நீற்றினில் புகுத்தும், யானையால் இடரச் செய்தும், அருள்நிலை யறியாது, பின்னும், கல்லொடு பிணித்துக் கடலிடை யாழ்த்தியவரன்றோ? காலம் பார்த்தன்றோ செல்லுதல் வேண்டும். இப்போதுள்ள கோள்களும் தீயன. ஆதலால், நீர் போதல் ஒண்ணாது. யானே போய், அவ்வமணர் தீ மாயையினைச் சிதைத்து வருகின்றேன். (என்று எழுந்தார்.)

திருஞானசம்பந்தர்:—சிவப் பழ அப்பரே,

நாம் இடையறாது பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால் பழுதணையாது.

திருச்சிற்றம்பலம்

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்து என்னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனிபாம்பு மிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே."

(சம்பந்தர்.)

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர்:—சிரபுரச் செல்வரே,

நன்றருளிச் செய்தீர். யானும் உடன்வருகின்றேன்.

(என்று எழுந்தார்.)

திருஞானசம்பந்தர்:—அப்பர் பெரும,

(கைகுவித்து) நீர் இப்புனல் நாட்டில் எழுந்தருளி யிருப்பீர். யானே போய்மீள்வல்.

திருநாவுக்கரசர்:—திருவருள் இதுவாயின் அப்படியே யாகுக. வேதம் வளர்க்கவும், சைவம் விளக்குதற்கும் சென்று மீள்க. வேதவனத் தருமணியை மீண்டும் புக்கு வணங்கிப் போவோம்.

இருவரும் மீண்டும் கோவில் புக்குப் பாதமுறப் பணிந்து எழுந்தார், பாடினார், போற்றினார், பரசியருள் பெற்று விடை கொண்டு வெளிவந்தார். இருவருந் தழுவினார்.

திருஞான சம்பந்தர்:—எம் அப்பரே,

உம்மை விட்டுப் பிரிய மன மில்லேன். ஒன்றாய்ப் போகலாம். ஆனால் உம்மைக் கண்டால், அந்த அமணர்களுக்கு வெகுளி தோன்றிக் கேடு விளைப்பார்கள் என்று எண்ணுகிறேன். நான் தனித்துச்சென்றால், திருவருளை வியந்து நல்வழிப்படவுங் கூடும். எவ்வாறாயினும் நம் நோக்கமும் அது தானே.

திருநாவுக்கரசர்:—மறுத்தற் கிடனின்றிப் பேசாது நின்றார்.

திருஞான சம்பந்தர் அருமையாய் நீங்கிக் கதிர்ச்சிவிகை மருங்கணைந்தார். ஒரு நாமத்தெழுத் தஞ்சும்ஓதி, அடியார் போற்றச்சிவிகை ஏறிப் புறப்பட்டார்.

இரண்டாம்அங்கம்---மூன்றாங்காட்சி

அடியார்களுள் ஒருவர்:—மற்றொருவரை நோக்கி,

அன்பரே, இன்று நான் பெற்ற இன்பத்திற் கோரளவில்லை, நமது "அருள் ஞானக்கன்றும், அன்புசெறி கடலும், எனப் போற்றத்தகுந்த, திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும், ஒருவரோடொருவர் கூடிக்கலந்ததும், பிரியாமனதுடன், விடை பெற்றதும், எண்ணுந்தோறும், எந்நெஞ்சம் நெக்குருகின்றது. என்ன அருமை! பார்த்தீரா! நமது பிள்ளையார், போவேனென்று எழுந்ததும், நமது அப்பர், எவ்வளவு ஆத்திரத்துடன், பதறிக் குழறித்தடுத்தார், தாமே போவேனென்றுங் கூறினார்.

மற்றவர்:—அதற்கென்ன தடை, யாவரேயாயினும் இவர்களிருவரும் நடந்து கொண்டதைப் பார்த்தால் மனம் நெகிழாதிருப்பார்களா. இதுபற்றியன்றோ,

"சம்பந்தர் நாவரசுபாற் கண்டோஞ் சார்ந்துவப்ப
தும்பிரிவி லுள்ளுவதுஞ் சோமேசா—"

என்றார் பெரியார். நமது அப்பர் பெருமானுக்கு, பிள்ளையார்க்குத் திருவருளினாலே துன்பநுகர்ச்சியாதும் நிகழாதென்பது தெரியாதென்பதல்ல. பிள்ளையார்மேல் மிகுந்த காதல் உடையவராதலால், இடையூற்றின் தோற்றமும் அவர்க்குக் கூடாதென்பது தான் அவர் கருத்து.

மூன்றாம் அங்கம்—முதற்காட்சி.

இடம்:—மதுரை அரண்மனையில் ஒரு சார்.
காலம்:—முற்பகல்.
நடர்:—மங்கையர்க்கரசியார் தோழிமார்களுடன், தூதுவர்கள், குலச்சிறையார், முதலியோர்.

தூதுவர்:—(மங்கையர்க் கரசியாரை வணங்கி முன்னின்று,)

எங்கள் தவமாய் இங்கமர் அம்மையே,

சைவ வான் பயிரைத் திருமறைக் காட்டில் கண்டு இறைஞ்சினம். நம் வேண்டுகோட் கிணங்கி உடனே வருகின்றனர். நாளைக் காலை இவண் உறுவர். நாங்கள் தகவற் கூற முன் வந்தோம்.

மங்கையர்க் கரசியார்:—இன்று நான் பெற்ற இன்பமே இன்பம்.

(குலச்சிறையாரும் அது பொழுது அங்கு வந்து வணங்கல்) நோக்கி, எங்கள் குலவிளக்காய அமைச்சரே.

நங்கள் தம்பிரானார் நண்ணினார். ஞான போனகர் முன் பெய்தி,

"எழுந்தருள உய்ந்தோமெ"ன எதிர் கொள்ளும்.

குலச்சிறையார்:—எம் அம்மையே,

அப்படியே சென்று எதிரேற்று வருகின்றேன்.

மூன்றும் அங்கம்—இரண்டாங் காட்சி.

இடம்:—மதுரை அரண்மனை.

காலம்:—பிற்பகல்.

நடர்:—எண் குன்றம் வாழ் அமண் குருக்கண்மார், கூன் பாண்டியன்.

கூன்பாண்டியன்:—குருக்கண்மார் கூடிவந்ததும் வணங்கி, அடிகண்மீர், புகுந்த புதுமை யாது?

அடிகண்மார்:....மன்னே, தீய கனவு கண்டோம். செப்புதற்குற்றோம்.

அரசன்:—கனவின் திறமென்னை?

அடிகண்மார்:—அரசே,

நந்தேவர், இருந்த அசோகு மரம், வேரோடு சாய்ந்து, அவர்மேலே விழக் கண்டோம். அதன்பின், அழகிய முக்குடையோடு தாம் எழுந்து கை உதறிப் போகவுங் கண்டோம். ஊராரும் ஓடக் கண்டனம். நம் (குரு பத்தினியாகிய) குரத்தி கையிலுள்ள குண்டிகையை உடைத்து, கொண்ட பாயினைக் கிழித்து ஓடவுங் கண்டோம். நமது பண்டிதர்களெல்லாம் கழுதைமே

லேறிப் போகவும், அவர்கள் பாலுற்ற "கலைமகள்" புலம்பியோடவுங் கண்டோம். கானிடை நட்ட மாடுங், கண்ணுதற்றெண்டரெல்லாம், இங்கு விரவிடக் கண்டோம். நீறும், வெய்ய கொழுந்தழல் முழுகக் கண்டோம். ஆனபின் எழவுங் கண்டோம். மழவிடை இளங்கன்றொன்று வரக் கண்டோம். நம் கழகந்தன்னை உழறிச் சிதறி யோடச் செய்யவுங் கண்டோம். நம்மவர் யாரும் தடுக்க அஞ்சி, விழவொரு புகலுமின்றி, நிழலிலா மரங்களேறி நின்றிடவுங் கண்டோம். இக்கனாத் திறம் அடிகண் மார்க்குத் தீங்கு விளைப்பது திடமே.

(என் செய்வது என்று யாவரும் இடருழந்தனர்).

மூன்றும் அங்கம்—மூன்றாங் காட்சி.

இடம்:—மதுரையின் வெளிப்புறம்.

காலம்:—விடியற் காலம்.

நடர்:—குலச்சிறையார், திருஞானசம்பந்தர், அடியார்கள், முதலியோர்.

குலச்சிறையார் ஊரின் வெளிப்புறம் போந்து, ஞானசம்பந்தர் திருச்சின்னம் ஊதும் ஓசை கேட்டு உளமகிழ்ந்து, எதிரணைந்து, தலைக் கை குவித்து, நிலமுறப் பணிந்து வணங்கிக் கிடந்தனர்.

சிவனடியார்கள்:—(வணங்கிக் கிடக்கும் "குலச்சிறையாரை" இவரெனத் தெரிந்து எதிர் வணங்கி,) அன்பரே, எழும், எழும், என்றனர்.

உடனே ஞானசம்பந்தர்பால் சென்று

சைவ மணி விளக்கே,

குலச்சிறையாருற்றார், வணங்கினர் கிடந்தார். பன்முறை வேண்டியும் எழாது, கண்ணீர் பெருக்கி, அன்புறுகின்றார்.

திருஞானசம்பந்தர்:—முகமலர்ந்து, சிவிகை யிழிந்து, விரைந்து சென்று, தமதிருகரத்தால் எடுத்தார். குலச்சிறையாரும் தொழுது முன்னின்றார், வள்ளலார் அவரையே நோக்கி, வாக்களிக்கின்றார்.

"செம்பியர் பெருமான் குலமகளார்க்கும், திருந்திய சிந்தையீர்! உமக்கும்,

நம்பெருமான் திருவருள்பெருகும். நன்மைதான் வாலிதே,

குலச்சிறையார்:—எங்கள் வாழ்வே,

எங்கட்கு இனி என்குறை யுளது? சென்ற காலமும் பழுதின்று. இனி, எதிர் காலமோ சிறந்தது. இங்கு எழுந்தருளப் பெற்றேம்; இதனால் எற்றைக்கும் திருவருள் உடையோம். நன்றியில் நெறியில், அழுந்திய நாடு, உய்ந்தது. தமிழும் மேன்மையுற்றது. வேந்தரும் உய்ந்தார். திருநீற்றொளி விளங்கும் மேன்மையும் படைத்தனம். (தொடரும்).

புஷ்பங்களும் அவற்றின் தொழிலும்

[Puof : P. சுந்தரம்பிள்ளை யவர்கள், M. A.]

(கஉக-ம் பக்கத் தொடர்ச்சி)

7. நாம் பரிசோதித்தறிந்த மகரந்தக் காம்புகளையும் இனி மெல்லெனக்கிள்ளி யெறிந்து விட்டு, இவற்றிற்கும் அப்புறம் மலருடைய நடுப்பக்கத்திலிருப்பது என்னவென்று பாருங்கள். கோபுரத்தின்மேல் வைக்கிற ஸ்தூபிகலசம் போலவும் நாம் வீட்டிற் பரிமாறும் பனிநீர்ச்செம்பு போலவும் வடிவுடையதாய், அடியும் தலையும் பெருத்து இடைசுருங்கித் தண்டாகாரமாக நீண்ட ஒரு உறுப்பு பூவின் நேர்நடுவில் நிற்பது தெரிகிறதா? அடியில் பெருத்து உருண்டு திரண்டிருக்கிறதைப் பத்திரமாய்க் கவனித்துத் துண்டித்துப்பார்த்தால், நாரகக்காயினுள் இருப்பதுபோலவே சிறுசிறு அறைகளும் அவ்வறைகளுக்குள் சிறுசிறு விதைகளும் அதிசூக்குமமாக இருப்பது வெளிப்படும். உண்மையில் இதுவே நாரகக்காயாகக் காலக்கிரமத்தில் உருக்கொண்டு பெருக்கின்றது. இங்ஙனம் மேற்காயாகப் பாவித்தற்குரிய இப்பூவுறுப்பிற்குப் பொகுட்டு* அல்லது

* "பொகுட்டுத் தாமரைப் பூங்கொட்டை" என நிகண்டுள் சிறப்புப்பெயராகக் காணப்படினும் "பொகுட்டே கன்னிகை பூவினுட் கொட்டை" எனப் பொதுப்படக் கூறுவர் பூர்வாசாரியாராகிய சேந்தனார்.

பூங்கோட்டை- பூம்பிஞ்சு (ovary) என்று பெயர்: அப்பூங் கொட்டைக் குள்ளிருக்கும் சூக்குமவிதைகளுக் குக் கெர்ப்பகோளம் (ovule) என்று சொல் லுவார்கள். வாஸ்தவத்தில் இக்கெர்ப்பகோளங் கள் ஒவ்வொன்றும் வீரியமடைந்து பலி தப்பட்டுப் பெருத்துவருவதே பிற்கிளையாக் கத்திற்குப்பிரத்தியக்ஷ ஏதுவாக விளங்கும் 'விதை விதை' யென்று சொல்லப்படுவது. "அப்படியா னால் இச்சிறுவிதை ரூபமாக இருக்கிற கெர்ப்ப கோளங்கள் மாத்திரம் போதாவோ? நாம் பார் த்த மகரந்த பஞ்சரம் ஏன்? மகரந்தத்தூள் ஏன்?' என்னில், இதோ பாருங்கள்! இக்கிளையில் ஒரு கெர்ப்பகோளமாகிய சிறு காயிருக்கிறது! வாடி யுலர்ந்துஉதிரும் தன்மையில்அன்றோ அதன் நிலை! அதற்குச் சமீபத்தில் உள்ள இலையை ஒரு புழு அரித்திருக்கிறது பார்த்தீர்களா? புஷ்பத் தில் இருந்த மகரந்தக்காம்புகளையும் மொட்டாக

போதுட்டு
அல்லது
பூம்பிஞ்சு.
1. மகரந்தவா ளினி
2. கெர்ப்பகோளம்

இருக்கும்போது அப்புழு அரித்து உண்டிருக்கவேண்டும் என் பது புறவிதழில் தோற்றுகிற தழும்பால் ஊகிக்கலாமல்லவா? அவ்விதமாக மகரந்த பஞ்சரங்களுக்கு ஏதோ கெடுதி நேரிட்ட தினால் தான் இக்கெர்ப்ப கோளப்பையாகிய போதுட்டு, இப்படி பலிதப்படாமல் வாடி யுலர்ந்து நிற்கிறது. பரீக்ஷை வழியாக இதனை நிரூபிக்கவேண்டுமானால் ஏதாவது அலர்ந்துவரும் ஒரு புஷ்பத்தில் உள்ள மகரந்தபஞ்சரங்களைக் கொய்து எறிந்து விடுங்கள். பிற்பாடு அப்புஷ்பத்தில் இருக்கும் சிறுகாய் இது போல உலர்ந்து உதிர்ந்து போகிறதில்லையா வென்று பாருங் கள்! பஞ்சரங்களுக்குள்ளிருக்கும் மகரந்தத் தூளைத்துடைத்து அலம்பி விட்டாலும் சிறுகாயின்கதி முற்கூறியவாறே, யாகும், மழை நன்றாய்ப்பெய்து கொண்டிருக்குங்கால் புஷ்பிக்கும் புஷ் பங்கள் எல்லாம் பலிதப்படாமல் போவதற்கும் காரணம் இது தான். இந்தியாயங்களால் கெர்ப்பகோளங்களான சிறு விதை மாத்திரம் தாமே காயாவதற்கு வலிமையுடையவையல்ல வென்

பது சந்தேகமறத் துணியலாமல்லவா? இனியும் நமக்கு அகப் படும் சந்தர்ப்பங்களில் அதனை நிரூபிப்போம். கெர்ப்பகோள மாத்திரத்தால் காயாவது கூடுவதன்று என்பதில் யார்க்கும் ஐயம் வேண்டுவதில்லை. அங்ஙனம் பலிதமாவது மற்றெப்படி யென்னில் நாம் முற்கூறிய மகரந்த ரேணுக்களில் இருக்கும் விந்துதத்துவம் இச்சிறு பிஞ்சுக்குள் வந்து கலத்தல் வேண்டும்.

8. அங்ஙனம் விந்து தத்துவம் வந்து கலத்தற்காகவே, நாம் கெர்ப்பகோளம் என்று பெயரிட்ட சிறு பிஞ்சின் தலை மேல் இக்காம்பு இருக்கிறது. இதன் நுனிபருத்து விரிந்திருப் பது தெரிகிறதா? தொட்டுப்பாருங்கள்? வழுவழுப்பான ஒரு விதமான பசை கையிற் படுகிறதல்லவா? கூர்மையாகப் பார்த் தால் இந்நுனியின் மேல் சிறுசிறு புள்ளிகள் சற்றே வெண்மை யாகத் தோற்றலாம். இப்படிப் பிஞ்சுக்காயின் மேலிருக்கும் காம் பிற்குமகரந்தவாகினி (Pistil) என்று பெயர். அதன் வழு வழுப்பான நுனிக்கு மகரந்தவாகினித்தலை (stigma) யென்று சொல்லலாம். மகரந்தவாகினித் தலைக்கும் பிஞ்சுக்காய்க்கும் இடையே சிறுத்துத் தோற்றும் உடல்தான் மகரந்தவாகினிக் காம்பு (style). ஆனால் இவ்வுடல் நாரகமலரில் காணப்படுவது போல் மற்றெல்லாமலரிலும் இருக்கவேண்டுமென்பதும் நியமம் அன்று. ஒவ்வொரு புஷ்பங்களில் ஒவ்வொரு விதமாக இருக்கும். அந்தக்கிரமங்களை அங்கங்கு சோதிக்கும்போது அறிந்து கொள் ளலாம். நாம் இப்போது கவனிக்க வேண்டுவது மகரந்த விந்து, பிஞ்சாகிய கெர்ப்ப கோளத்துக்குள் எவ்விதம் பிரவே சிக்கிறது என்பதே.

9. புஷ்பம் அலரும் பொழுதே மகரந்த பஞ்சரம் வெடிக் கிறது என்று சொன்னேமல்லவா? வெடிக்கவே அதனுள்ளிருக் கும் மகரந்தத்தூள் நாற்புறத்திலும் சிதறுண்டு விழுகின்றது. அந்த ரேணுக்களில் சில, மகரந்தவாகினியின் வழுவழுப்பான சிரசிலும் விழும். விழுந்தவைகளோ அத்தலை வழுவழுப்பாக இருப்பதினால் அங்கே ஒட்டிக்கொள்ளுகின்றன. உடனே அவ் விரேணுக்களுக்குள்ளிருக்கும் விந்து தத்துவம் வெளிப்படுகின் றது. அது கண்ணுக்குப் புலப்படத்தக்கதன்று. சிற்றுரு

விளக்கியால் பார்த்தால் மிகவும் நுண்மையான நூல்போலும் வடிவினையுடையதாய், தானே சலிக்கும் வல்லமையோடு கூடிய மூலசத்தையின் அதிக விசேஷமான விகற்பமாக விளங்கும். அதின் குணாதிசயங்களைப் பற்றிப் பிற்பாடு சிந்திப்போம். இந்நூல் போன்ற விந்து தத்துவம் மகரந்தவாகினியின் சிரசிலிருந்து அங்கே நாம் சற்றுமுன் குறிப்பிட்ட வெண்மையான சிறுபுள்ளிகளில் அடைகின்றது. இப்புள்ளிகளோ, சிறு பிஞ்சு முதல் மகரந்த வாகினிக்காம்பை யூடுருவிக்கொண்டு அதின் தலை நுனிவரையும் வந்திருக்கின்ற அதிநுட்பமானகுழல்களின் கடைசி வெளிகளாகும். இதோ இக்காம்பை யறுத்து நன்றாய்க் கவனித்துப்பாருங்கள்! குழல்களின் சாயை தெரிகிறதல்லவா? நல்லது! இக்குழல்கள் வழியாகத்தான் மகரந்த வாகினியின் தலையில் தங்கிய விந்து தத்துவமானது மெள்ள மெள்ளப் புகுந்து முடிவில் பிஞ்சாகிய பொகுட்டுக்குள் சென்று சேருகிறது. அவ்விடத்திலோ சிறுவிதை ரூபமான கெர்ப்ப கோளங்கள் இருக்கின்றனவே. படிப்படியாய்ப் பரவி முடிவில் இச்சிறு விதைகளுக்குள் புகுந்து அவற்றின் சத்தையோடு கலக்க அவை வீரிய மடைந்து பலிதமாகின்றன. கெர்ப்ப கோளத்துக் குள்ளிருக்கும் சத்தைக்கு நாதத்துவம் என்று நம்மவர்கள் சொல்லுவார்கள். மகரந்த ரேணுக்களின் உள்ளிருக்கும் விந்து தத்துவத்தை வகித்து இங்ஙனம் பிஞ்சினுள் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் தன்மைபற்றியே அப்பிஞ்சின் மேலிருக்கும் உறுப்பிற்கு மகரந்தவிந்துவாகினி அல்லது சுருக்கத்தில் மகரந்தவாகினி, விந்துவாகினி யென்னும் பெயர்கள் உண்டாயிருக்கின்றன. ஆகவே இந்நாரக (நாரத்தை) மலரின் முக்கிய அங்கங்கள் மகரந்த பஞ்சரத்துள் வீற்றிருக்கும் ரேணுக்களின் விந்துவும் பொகுட்டென்று நாம் கூறிய சிறு பிஞ்சினுள் காத்திருக்கும் சிறுவிதை ரூபமான கெர்ப்பகோளங்களுமேயாம். இவை யிரண்டையும் கலப்பிக்கும் மார்க்கமாகிய விந்து வாகினியும் முக்கிய அங்கங்களுள் ஒன்றாகவே கூறலாகும்.

10. இதுவே நாரகமலர் காயாகும் கிரமம். காயானபின்

முதிர்ந்து பழமாய் அதினுள்ள விதைகள், சரியான காலதேச பக்குவங்கள் இருக்குமாயின், அவைகளை யீன்ற மரம் போன்ற வேறு மரங்களைத் தாய் மரத்தின் பிற்கிளைகளாக உற்பத்தி செய்ய வல்லமையுடையன என்பது யாவரும் அறிந்த விஷயம்.

11. நாம் இப்போது பார்த்து அறிந்துகொண்ட சங்கதிகளால் மரவருக்கத்தின் பிரத்தியுத்பாதனம் என்னும் பெருந்தொழில் நடந்தேறுவதற்கு முக்கியமானது, மகரந்த ரேணுக்களிலுள்ள விந்து தத்துவம், பொகுட்டு, பூந் கொட்டை, அல்லது பூம்பிஞ்சு என்று சொல்லப் பட்டதின் உள்ளிருக்கும் சிறு விதை ரூபமான கெர்ப்பகோளத்தோடு கலக்கவேண்டிய தொன்றே யென முடிகிறது. இதன் பொருட்டே மரங்கள் பூப்பது பூவிலுள்ள உறுப்புக்கள் ஒவ்வொன்றினுத்தேசமும் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவகை மலரில் எடுத்துச்கொள்ளும் வேவ்வேறான எண்ணற்றவடிவம், ஒழுங்கு, குணம் முதலியவற்றின் குறிப்பும் இதுவே. "காக்கை யிருந்தது பனம்பழம் விழுந்தது" என்றபடி மகரந்த பஞ்சரத்துள்ளிருக்கும் ரேணுக்கள் விந்துவாகினியின் உச்சியில் தக்க பருவத்தில் உதிரவேண்டியதாக இருப்பதினால், இத்தொழில் நன்கு முடியுமாறு ஒவ்வொரு புஷ்பவருக்கத்திலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அனந்த கோடி உபாயங்கள் அத்தியந்தம் ஆச்சரிய தமமானவை. நாம் சோதித்த நாரக மரத்தில் மகரந்த பஞ்சரங்களும் விந்து வாகினியும் ஒரே மலரிலல்லவோ இருந்தன. அப்படியே எல்லாமலரிலும் இருப்பன அல்ல. இதோ படரும் பூசனியில் பூக்கும் பூவெல்லாம் காயாகிறதில்லையே. காயாகும் பூ சிறுகாயென்னும் பொகுட்டோடு வேறே இதோ தோற்றுகின்றன பாருங்கள். இப்பூவில் ஒன்றைப் பரிசோதிக்கில் விந்து வாகினியேயல்லாமல் மகரந்த பஞ்சரம் ஒன்றும் காணமாட்டாது. வெளியில் சுற்றிய புறவிதழ் ஐந்தும் ஒன்றுபட வளையப்பட்டுக்குவிந்த கிண்ணம்போல் ஒன்றாக இருப்பது நாம் இப்போது கவனிக்க வேண்டிய சங்கதியன்று. உள்ளே மகரந்த பஞ்சரம் இல்லாமை, நாம் கூறிய விதிக்கு விரோதமாகத் தோற்றுவதே விசேஷம்.

ஆனால் மற்றுக் காயாயாகாத பூவில் ஒன்றைப் பாருங்கள்! அதில் மகரந்தக் காம்புகளனைத்தும் ஒன்றுபட நார்பின்னுவது போல் பின்னப்பட்டு ஒரே காம்பாக நிற்பதும், அது நிறைய மகரந்த ரேணுக்கள் பொதிந்து நின்று உதிர்ந்து விழுவதும் கண்டீர்களா! இங்ஙனம் ஒரு பூவிலுள்ள மகரந்த ரேணுமற்றொரு பூவிலுள்ள விந்து வாகினியைச் சென்றடைய அன்றோ வேண்டியதாக இருக்கிறது. இது மாத்திரம் அன்று, மகரந்த முடையது ஒரு பூவும், காயாக வேண்டுவது வேறொரு பூவும் ஆக இருப்பினும் இரண்டு பூவும் ஒரே பூசனிக்கொடியில் தானேயிருக்கின்றன. சில மரவர்க்கங்களில் அப்படியேனும் இல்லாமல், ஒரு மரத்தில் மகரந்த மலரும் மற்றொரு மரத்தில் விந்து வாகினிமலரும் இருந்து காயாக வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு. இதோ இச்சவுக்குமரம் (casuarina muricata) காயாது நிற்பது கண்டீர்களா. அதோ நிற்பதில் நிறையக்காயிருப்பது பார்மின். முன்னது மகரந்தம் மாத்திரமே யுடையது. அது ஒரு போதும் காயாது. பின்னதில் கெர்ப்ப கோளங்கள் மாத்திரமே யுண்டு. அம்மரமே மற்றதின் மகரந்த ரேணுக்களின் சேர்க்கையால் காய்க்கக் கூடியது. இவ்வேற்றுமையால் தான் ஒன்றை ஆண் மரமென்றும் மற்றதைப் பெண்மரமென்றும் நம்மவர்களில் சிலர் கூறுகின்றனர். அறிந்துசொல்லினும் அறியாது சொல்லினும் உண்மை அதுவே. இத்தகைய காகதாலீயப்புணர்ச்சிக்கு நேரிடத்தக்க பிரதிபந்தங்களை விலக்கிச் சுலபப்படுத்தும்பொருட்டுச் செய்திருக்கும் ஏற்பாடுகளைக் குறித்துச் சிந்திக்கில் எவ்வளவு காலம் யோசிக்கினும் தெவிட்டாத சித்சுகத்தை விளைவிக்கத் தக்கனவாக இருக்கும். அவற்றுள் வண்டு தேனீ முதலியவற்றின் நல்வரவும் காற்றின் சஞ்சாரமுமே பிரதான ஹேது பூதங்களாக இருக்கின்றன என்று மாத்திரம் இவ்விடத்தில் தெரிவிக்கக் கூடியது. இவற்றுள் மதுகரங்கள் ஜீவஜாலத்துள் அகப்பட்ட படியால், அவைகள் செய்யும் தொழிலுக்குப் பிரதி பிரயோசனமாக விருந்தளிக்கவே தேன்துளிகள் புஷ்பங்களுக்குள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. வண்டுக்கூட்டம் மலரிருக்கும் இடம் தெரிந்து வரும்படி வைத்தவையாம்

மலர்களின் புறவிதழில் நாம் கண்டு மகிழும் பல்வேறு நிறங்களும், நாம் கொண்டாடும் நறுமணங்களும், இவைகளைப்பற்றி ஒவ்வொரு புஷ்ப விகற்பங்களையும் சோதனை செய்யும் தருணத்தில் சொல்வதே உசிதம், இப்போது வெயிலால் விட்டபடியாலும் உங்களில் சிலருக்குப் பசியும் ஒருபுறம் தபிக்கத் தலைப்பட்டிருக்கக் கூடியதினாலும் இன்று இவ்வளவோடு முடித்து வீட்டுக்குத் திரும்புவோம். இவ்வளவும் வீண் பொழுதாயினதே யென்று நினையாதேயுங்கள்! பசிப்பதும் பசிதீர்ப்பதும் என்று தான் இல்லை. "செவிக்குணவில்லாத போழ்து" அன்றோ "சிறிது வயிற்றிற்கு மீயப்படும்" என்றார் நாயனார், "தீராத குழி தீர்க்கை தொழிலாக"க் கொண்ட நம்முயற்சியின் நிலைமை பற்றியன்றோ "யோசிக்கும் வேளையிற் பசி தீர வுண்பதும் உறங்குவதுமாக முடியும்," என்றருளினார் பிரமானுபூதிச் செல்வராகிய தாயுமானவர். அங்ஙனம், பொழுது விடிந்து கண் துடைத்து எழுந்தது முதல் இரவில் கொட்டாவி விட்டுக் கண் மயங்கிச் சோரும் வரையும் 'எனக்கு எனக்கு' என்று ஓயாது தன்னயமே கருதி, ஒரு கணப்பொழுதேனும் உள்ளும் புறமும் ததும்பி விளங்கும் சித் விலாசத்தை யெட்டிப்பாராமல், வாணியன் வீட்டுச் செக்கெருதுபோலச் சென்றவழியே சென்று சுற்றிச் சுற்றி யுழைத்து நமது அரிய வாழ்நாள் முழுதும் கழித்து விட்டால், விவேக சூந்யமான மிருகங்களுக்கும் நமக்கும் வேற்றுமை யென்னும்? ஐயோ!

> " செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
> அவியினும் வாழினும் என்."
>
> —விவேக சிந்தாமணி

ஆ. திரு. இராமலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றிய

திருச் செந்தூர்த் தண்டக மாலை.

காப்பு

சீர்மலிசெந் தூர்வளருந் தேவானை வள்ளியுட
னேர்மலிவே லேந்திமயி லேறிவரு—மோர்முருகன்
தண்டா மரைப்பதத்திற் றண்டகத்தார் சாற்றவெனக்
குண்டாங்கை நாகத் துவப்பு.

நூல்

பூவி லயன்மால் புரந்தரன்மற் றும்பரெலாஞ்
சேவிக்கச் செந்தூரிற் சேர்முருகா !—ஆவிதனக்
குற்ற துணையா முனையடைத லன்றோயான்
பெற்ற பிறப்படையும் பேறு. 1

பெண்க டனமும் பிறங்குமவர் பேரெழிலுங்
கண்கவர விட்டுக் கரந்தனையோ!—தண்கமலம்
பற்றாதே பாவி பரதவிக்க யாரெனக்குச்
சொற்றாரோ செந்தூரா சூள். 2

பாடில் படித்துனக்குப் பத்திசெயும் வேளையினு
மோடித் திரிந்துமய லுற்றதே—பேடிமனங்
கட்டார்செந் தூர்வளருங் கந்தாவுன் சேவடியைக்
கிட்டாரென் செய்வேன் கிளைத்து. 3

பத்திசெயும் போதேனும் பண்பொடுசும் மாவிரென
வெத்தனையோ புத்தி யிசைத்தாலும்—பித்தமனந்
தான்போன போக்கேதான் சாதித்தாற் செந்தூரா !
நான்போக லெப்போ நவில். 4

உண்மையறி வாள ரொதுங்கியிருந் தானந்தங்
கண்பொழிய நின்றே கருதுவார்—பண்பொழியுஞ்
சிந்தையனேன் மெத்த தெரிந்தவர்போற் செந்தூரா!
முந்துகின்றே னேதோ மொழிந்து. 5

உண்டுறங்கும் போது முனைநினைய வல்லாரே
கண்டுருகிச் சேருங் கருத்துடையார்—வண்டளையுங்
கூந்தலார் சிந்தனையே கொண்டலைவேன் செந்தூரா!
நீந்தலுண்டோ பாவ நிகழ்த்து. 6

ஒருகாலத் தேனுமுனைக் குள்ளன்பு மிக்க
பெருகாத ரத்தோடு பேணி—முருகாகந்
தாவென்றாற் செந்தூரா தாராயோ வுன்னடியைப்
பாவென்றால் வாராயோ பார்த்து. 7

வன்னியே கேதனமாய் வாசவனே வாகனமாய்ச்
சென்னியா றாய்த்திகழுஞ் செந்தூரா—வுன்னியுனைப்
பத்தி வலையாலே பந்திப்பான் றந்தருளாய்
சித்தி யடையுந் திறம். 8

அறப்பகையோ டெற்பகையு மாளமுன் பின்னு
மிறப்பகைவே றாங்குசெந்தூ ரீசா!—விறப்ப
வரினுமுன் பாத மறப்பனோ அன்பு
தரினுஞ்சேய் நீங்குமோ தாய். 9

நாயேனை யாண்டருளு நாயகனே செந்தூரிற்
றாயானா யெல்லோர்க்குந் தற்பரனே!—யோயாமற்
பன்னிருதோ ளாறுமுகம் பச்சைமயில் வேலுடனே
யென்னிருகண் முன்வா வெழுந்து. 10

நாவாரப் பாடிநித நாயகனே செந்தூரா!
பூவாருன் சேவடிக்கே போதிடுவேன்—காவாரும்
வானாட் டரசு மதிப்பனோ நின்னருளிற்
றானாட்டம் வைத்தபின்னுந் தான். 11

தனக்குவமை யில்லாதான் றானைவையு மானான்
றனக்குமுப தேசிக்குஞ் சாமி!—எனக்கருளு
நற்றவனே! சீரலைவாய் நாயகமே! யுன்னடியே
பற்றெனயான் கொண்டேன் பரிந்து. 12

பரிந்துபல நூல்கள் பயின்றுமலை தோறுந்
திரிந்துபல னெய்திலருஞ் செந்தூர்—பொருந்தியே
கந்தாவுன் பாதங் கருதுவரேல் முத்தியுடன்
றந்தாள்வா யென்பார்நீ தான். 13

தான்மறைக ளோதுஞ் சமர்த்தனெனத் தற்புகழு
நான்முகனை வன்சிறையி னாட்டியவா!—தேன்வழியுஞ்
சந்தவரைச் சண்முகனே சந்ததமு முன்னருளே
சொந்தமெனக் கென்றேன் றுணிந்து. 14

துணிந்தசில வோடறுகு தூயகொன்றை சென்னிக்
கணிந்தசிவ னார்மகனே யன்பாற்—பணிந்தவிணோர்
துன்பந் துடைத்தசெந்திற் றாயோனே துன்பமுட
னின்பந் துடைத்தெனையா ளீண்டு. 15

ஈண்டுபொரு ணாண்முழுது மீட்டுவதிற் றன்கழித்தா
லாண்டுலகுக் கேதுபய னாக்குவேன்?—வேண்டுபொரு
ளத்தனையுஞ் சீரலைவா யாறுமுகா நீயருள
வித்தனைபா டெற்கே னியம்பு 16

இயம்புமறை நான்குமே யெத்தனையோ கால
நயம்படநின் றேத்தியுங்கா ணாதான்—சுயம்பிரகா
சத்தொளியாய்ச் செந்தூரிற் சண்முகனை யெற்கருளுஞ்
சத்தொளியா னந்தமயந் தான். 17

தன்பேரி லாசை தமியேற்கிங் கூட்டினான்
றன்பேருஞ் சொல்லத் தகுமோதான்—அன்பேறக்
கூடிக் குலாவிக் குகனென்று தான்மறைந்தான்
சேடியரே செந்தூரிற் சேய். 18

சேயாக வந்தான் சிரபுரத்து வேதியர்பாற்
றீயே னிருளகற்றுந் தேவனே—தாயார்
வயிற்றிற் பிறவா வகையருளுஞ் செந்தூர்
குயிற்றியபொற் கோயிலாய்க் கொண்டு. 19

கொண்ட கணவனே குற்றமெனத் தள்ளிடிலவ்
வொண்டொடிக்கிங் கேதுசுக முத்தமனே !—பண்டைவினை
யானாலுஞ் செந்தூரா யாண்டவனீ யானடிமை
தானாகுங் காத்தாள் தடுத்து. 20

தடுத்தடிமை கொண்டுந் தனதடியார்க் காக
நடித்தருள்பொன் னம்பலவாணரீ—கொடுத்த
மூலைப்பா லருந்தியவன் மூதெயில்சூழ் செந்தூ
ரலைப்பா லுகந்தபெரு மாள். 21

ஆளவல்லாய் தஞ்சமென வாண்டுகொண் டென்னுள்ள
நீளமெலாஞ் சோதித்த னீதியோ—காளகண்டக்
கண்ணுதலார் பெற்றருளுங் கற்பகமே! செந்தூரா
வெண்ணுதலென் கொண்டபின்ன ரின்று. 22

இன்பமெனப் பேயுலக மெண்ணுவன முற்றுமே
துன்பந் தருமாற் சுகமருள—லன்புருவாய்
நின்றதிருச் செந்தூர் நிமலாநின் சேவையலா
தொன்றிலைமற் றென்னு முலகு. 23

உலவா வறம்பொருளின் போடுயர்வீ டென்பாள்
தலைவாநின் றண்டைக்கா றாமே—கலவா
திருந்தாலுந் தோடமிலை யாரினிச் செந்தூராய்
வருந்தாது கொள்வார் மகள். 24

மகவான் குறையிரப்ப மாசூர் வலிதடியும்
பகவானென் றோலமிடும் பாவை—தகவா
லருளாயேற் செந்தூர் அறுமுகனே மெத்த
மருளாதென் செய்வாள் மறுத்து. 25

மறுத்தொருவர் மாதேநீ மால்மருகன் பாதம்
வெறுத்துறைதி யென்றால் வெகுள்வாள்—பொறுத்திருப்பா
ளெத்தனைநாட் செந்தூ ரிறைவாநான் சொல்வதிவண்
அத்தனையு மெய்யென் றறி. 26

அறிவேது மில்லாளுள் ளன்பிலாள் மிக்க
மறுவே நிறைந்த மனத்தாள்—கறுவுகின்ற
சிந்தனையா ளென்றாலுஞ் செந்தூரா னென்பார்க்கும்
வந்தனையே செய்வாள் மருண்டு. 27

மருண்டாவ தென்கொலோ மாதேயுள் ளன்பு
திரண்டா லொழியவந்து சேரான்—முரண்டாதே
யென்றாலுங் கேளா ளிறைவாசெந் தூர்முருகா
வென்றாலும் போதுமென்பா ளெற்கு. 28

எனக்குரிய வாவிபொரு ளிவ்வுடலுன் பாதந்
தனக்கே திறையாகத் தந்து—மனக்கவலை
யென்றுதா னிலகி யிருப்பேன்செந் தூரலாற்
குன்றுதோ றாடுங் குகா! 29

குகனேமெய்த் தெய்வமவன் கூர்வடிவே னெஞ்சே
பகடேறு மந்தகனார் பண்ணு—மிகறடிய
வுற்ற துணையா முவனுறை செந்தூரே
நற்றவர்க்கு வாழுகின்ற நாடு. 30

நாடுசெல்வம் கல்விமுதல் ஞானமெலா நெஞ்சேநீ
தேடியெங்குஞ் சென்றாலுஞ் சேராவாம்—பாடியே
செந்திநகர்த் தேவன் றிருவடியைச் சிந்திக்கில்
வந்துவிடு மெல்லா மலிந்து. 31

மலிந்த மடமாதர் வாழ்க்கையிலே சிக்கி
மெலிந்துழலு நெஞ்சேகம் வேலன்—பொலிந்துவளர்
செந்தூரைச் சேர்வார்க்குந் தீராத வல்வினையுஞ்
செந்தூளாய்ப் போகுமாந் தேர். 32

தேரோடும் வீதியிலே செந்தூரான் றந்தநிலை
யாரோடு சென்றிங் கறைகுவேன்—பாருடே
வந்தமுத லென்னுடனே வாழுபட நெஞ்சேநீ
யெந்தவித மோர்ந்தாய்சொ லெற்கு. 33

என்னைவிட நிற்கு மிதஞ்சொலுவா ரிங்குமிலை
யுன்னைவிட நற்றுணையெற் கொன்றுமிலை—சொன்னபடி
யெப்பொழுதும் நெஞ்சே யிருப்பாயேற் செந்தூரா
னெப்படியுஞ் சேர்வா னெமை. 34

எமைப்புரக்குஞ் செந்திநக ரீசனருட் டொண்டர்
தமைப்பரவுந் தூநெறியே சார்வா—யிமைப்பொழுதும்
பத்தியிலார் சங்கத்தைப் பாராதே மேலாகு
முத்தியிலே நெஞ்சே முயல். 35

முயன்று தவமாற்ற முன்னாகூ ழின்றே
லியன்றவள விற்குகனை யேத்திப்—பயின்று
வருவாயே னெஞ்சே மனோலயமுஞ் செந்தூர்ப்
பெருவாழ்வுங் கிட்டுமே பின். 36

பின்னுசடைத் தொங்கல் பிறங்க விளம்பால்வாய்
மன்னுசிறு பிள்ளையாய் வந்தருளித்—தென்னவன்றன்
வெந்நோய் தணித்த விமலனே செந்திநகர்
என்னோய் தீர்த்தாளு மிறை. 37

இறையளவும் பத்தியிலா வேழைபட நெஞ்சே!
குறையுனக்கென் வைத்தான் குமரன்—நறைமலர்த்தா
ளெண்ணாதே கெட்டா யெடுத்தெடுத்துச் சொல்லிமிகப்
புண்ணானேன் செந்தூர்க்குப் போ. 38

போதமிலா நெஞ்சேநீ புன்மையர் பானாளும்
வாதுக்கேன் சென்றுயிரை மாய்க்கிறாய்—நாதனருள்
கூடு வகைதேர் குறிப்புடனே யுண்ணினையாய்
வீடருளுஞ் செந்தூரன் வேல். 39

வேலுண்டு காக்க விரைமலரார் தண்டையார்
காலுண்டு நோக்கக் கரியநிற—மாலுண்ட
பூவிலே செந்தூர்ப் பொருப்புறைவே ணாமமே
நாவிலே யுண்டா நமக்கு. 40

கருமை

(திரு. கபசம் எழுதியது)

(௨௯௦ம் பக்கத் தொடர்ச்சி)

உலோகாயதக்கொள்கையையொத்த ஒருகருத்தால் தூண்டப்பெற்றுத் தேவர்கள் அமிர்தங் கடைந்தெடுக்கப் புகுந்தனரென்பது நிலைநாட்டக் கூடியதோ அன்றோ வென்பதை நேயர்களே முடித்துக் கொள்ளவேண்டிய தென்று முந்திய கட்டுரையிற் கூறப்பட்டது. இதிலொரு துணிபிற்கு வரத்துணையாய் நிற்குமிரண்டொரு உண்மைகளை ஈண்டுத்தருதும். தேவர்களென்று கூறப்படுவோர் மாநில மக்களைவிடச் சிறந்தவரெனக் கோடற்குச் சிறிதளவுஞ் சான்றில்லை. அவர்கள் விரும்பியுண்டவமிர்தம் யாண்டும் போகத்தைத் தருமொன்றாகக் காட்டப்பட்டுளதேயன்றி, போதத்தையளிக்கும் பொருளாகப் புகலப்படவில்லை. கற்பகத் தரு நிழலிலவர்கள் வாழும் வாழ்க்கை மாசகன்ற மனத்தார் விரும்பக் கூடியதன்று. நமது நாட்டுப் புலவர்களிதை யறியா திருந்தாரிலர். எப்பிறவியினும் மக்கட்பிறவியை உயர்த்திக் கூறினரேயன்றி, தேவர்பிறவியை யதற்கொப்பானதென்றோ, உயர்ந்ததென்றோ யாண்டு நவின்றிலர். இந்திர பதவியை நினைந்து எள்ளி நகையாடிய மதுகையோருமுளர். நானிலவேந்தர் பெறுஞ் செல்வத்தையு மின்பநுகர்ச்சியையும் பன்மடங்கு பெருக்குவதாற் பிறப்பதே இந்திர பதவியாமெனல் இழுக்காகுமோ? இஃதன்றி, உலோகாயத முதனூல் செய்தவன் பிருகற்பதி என்று சிவஞான சித்தியும் வேறு நூல்களும் பகர்கின்றன. பிருகற்பதி என்பவன் தேவகுருவாதலால் அவன் தானியற்றிய நூலில் தேவர்களின் கொள்கைகளை விரித்திட்டானென்று கூறுவதிற் குற்றமென்னை? உலோகாயத தேவர்களைப் பற்றிக் கூறுவதை இஃதுடன் நிறுத்துதும்.

கருமையின் மற்றொரு பகுதியை யாராய்ந்திக் கட்டுரையை முடிப்பாம். இதுகாறும் பார்த்தவற்றால் கருமை என்பது எல்லாவகையினும் இன்னாததாகவே விளக்கமுற்றது. அது

இருளுடனும் கூற்றுவனோடுங் கொடுமையோடுங் கூடி நிற்கு மென்பதே இதுவரையிற் பெறப்பட்ட உண்மை. கள்ள உள்ள மிருக்க, உயர்துறவிவேடம் பூண்டு திரியுங்கயவரைக் குன்றி மணிக் கொப்பிட்டுக் கருமையின் பண்பைத் திருவள்ளுவர் காட்டினார்.

"புறங்குன்றி கண்டனையரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து" (திருக்கு. கூடாவொழுக்கம்)

ஆயினுங் கருமை நன்மைக் கோரடையாள மாகவுநிற்கின்றது.

'செக்கச் செவேர்' 'பச்சைப்பசேர்' என்று சொல்லும் போதெல்லாம் பெரும்பாலும் இனிமையே குறிக்கப்படுமாயினும், செங்களம், பச்சைப்பாம்பு என்பவற்றை நினைக்கும்போது அவற்றிலினிமை யொன்றுமில்லை. இதுபோன்றே 'கன்னங்க ரேல்' என்று பேசுங்காற் பொதுவாக இன்னுமை தோன்றுமா யினும் 'கார்காலம்' 'கருந்தனம்' என்று சிறிதினிமையோடு புகல் கின்றேம். இவ்வினிமை வெளிப்படும் வகையை உற்று நோக்கு தல் நன்று.

குளிர் மிகுந்த நாடுகளில் ஆண்டிற்பெரும்பகுதி விசும் பெங்கும் முகில் மூடி, வெயிலும் வெளிச்சமும் அரிதாவதால் தட்ப நிலத்தார் இருளையும் மேகத்தையும் மிக வெறுக்கின்ற னர். ஆங்கிலத்தில் முகிலென்று பொருள்படும் '(clouds)' என்ற சொல்லே துன்பத்தையுந் தொல்லையையுங் குறிக்கும். தட்ப நிலத்தில் வெயிலும் வெளிச்சமும் இன்பமளிக்குமாறு வெப்ப நிலங்களில் மேகமும் மழையு மினிமை பயத்தலால், கரு முகில் திரண்டெழுந்து வானைமூடும் 'கார்காலம்' நலத்தையும், வளத்தையுங் காட்டுமே யொழியத் துன்பத்தையுந் தொல்லை யையு முணர்த்தாது. இங்ஙனமே, நிழல் என்றசொல் ஒரு ஆங்கிலனுக்குத் தரும் பொருள் வேறு, தமிழனுக்குத்தரும் பொருள்வேறு. பின்னவனுக்கு நிழலேயடைவது வாழ்க்கையின் குறிக் கோளாகிறது. 'இறைவன் திருவடி நிழலடைந்தார்' என்பது தமிழனுக்கு அவலக்கவலை நீங்கி அழியாவின்பம் பெறு தலை யுணர்த்தும். ஆங்கிலனுக்கோ இதற்கு முற்றும் முரணான

ஒரு கருத்தை 'நிழல்' என்ற சொல் தோற்றுவிக்கும். நிழ-லென்பது வெயிலும் வெளிச்சமுந் தடைப் படுவதாலுண்டாவது. ஆதலின், அது வெளிச்சத்திற்கு முரண்பட்டுக் கருமையின் பாற்படும். நிழல் தருமரங்களைப் பாதை யோரத்தில் வளரச் செய்வது பேரற மாகுமென்று நமது நாட்டு முன்னோர் கூறிப் போந்தனர். இச் செய்கை அறம் ஆவது, மக்களுக்கு அது உதவுவதாலேயே யன்றி, நூல்களிற் கூறப்பட்டதாலன்று. 'அறஞ்செயவிரும்பு' என்று ஔவை சொன்னதால் நாம் அறஞ் செய்வோமென்று கூறுவதற்கிணங்க, காலம், இடம், தகுதி முதலியவற்றைக் கருதாது, நூல்களிற் கூறப்பட்டவாறே அறம் செய்வாமென்பார் கூற்று இரங்கற்குரித்தே. நிற்க. நமது நாட்டில் நிழலால் மக்கள் பெறும் நன்மையை அறிந்து நீண்ட சாலைகளை யமைத்து வேந்தர்கள் தம் பெயரை நிலை நாட்டியுளர். ஆதலின், கருமைப்பாற்படுங் காரும் நிழலும் இனியவாயின. அன்றியும், தமிழகத்தில் தொன்மை தொட்டின்றளவும் அரசுக்குறி குறியாயிருப்பது குடையாகும்.

'குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடை மெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்'
'பலகுடை நீழலுந் தங்குடைக் கீழ்க்காண்ப
ரலகுடை நீழ லவர்' (குறள், உழவு-3)

குடையை ஆட்சிக் கடையாளமாக வெடுத்துக்கொண்டது, அது நிழல் செய்யுந் தன்மைபற்றி, வேந்தர்கள் குடை வெண்ணிற முடையதாயினும் அது வெளிச்சத்தைத் தடுக்குங் கருவியாவதாற் கருமையின பாற்படும். இந்நாளிற் பெரும்பாலுங் குடைகள் கரியனவே. வெளிச்சத்தை யூடுருவிச் செல்ல விடாது தடுக்க வல்லது கருமையொன்றே யாதலாற் குடைகள் கருப்பா யிருக்கின்றன. கரியவென்று குடைகளை இகழ்வாரிலர். சகுனம் பார்ப்பவர்க்குக் குடை மங்கலப்பொருளாகும். சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப்பாடல் பின்வருமாறு தொடங்குகின்றது.

"திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர்த்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கணுல களித்தலான்"

குடை மங்கலப் பொருளாதல் யாதுபற்றி. குடை தானாகவே நன்மையைத் தரும் பொருளாகாது. அது வேந்தரோடு சேர்த்து நினைக்கப்படும் பொருளாதலின், வீட்டை விட்டு வெளிப்படு மொருவன் கண்ணிலது படுமாயின், அவன் கருத்திற் கண்ட நோக்கங் கை கூடுமென்ற நம்பிக்கையே, குடையை நற்சகுன மென்று கொள்ளுமெண்ணத்திற் கடிப்படையாகும். ஆயினு மது ஆட்சிக்கறிகுறி யாவது கொண்டு உயர்ந்தோர் தவிரப் பிறரதைப் பிடிக்கக் கூடாதென்ற குருட்டு வழக்கமு மிந்நாட்டி லெழுந்தது. சென்னை நகரத்திற்கு முதல் முதல் நகரப் பாது காப்புக்கழகம் (Municipal Corporation) அமைத்துக் கொடுத்தபோது ஆக்கழக உறுப்பினர்கள் குடை பிடிக்கும் உரிமை யுடையராயிருந்தாரென்று காணப்படுகிறது.

உவேல்ஸ் இளவரசர் சென்னை நகரத்திற்கு வந்து, நகரப் பாது காப்புக் கழகத்தால் வரவேற்கப்பட்டபோது இவ்வுண்மை வெளிப்பட்டது. நாட்டுப் புறங்களிலின்று மித்தகைய வழக்கங் கொண்டாடப்படுவது. கருமையின் கொடுமைபோலும். நிற்க. பின்வரும் பாட்டு குடை மங்கல மெனுந் துறையைச் சார்ந்தது.

" முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச்
செம்மீ னிமைக்கு மாக விசும்பி
னுச்சி நின்ற வுவவுமதி கண்டு
கட்சி மஞ்ஞையிற் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து
தொழுதன மல்லமோ பலவே ? கானற்
கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கு
மாரைச் சாகாட் டாழ்ச்சி போக்கு
முரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்
வலனிரங்கு முரசின் வாய்வாள் வளவன்
வெயின்மறைக் கொண்ட வுருகெழு சிறப்பின்
மாலை வெண்குடை யொக்கு மாலெனவே
(துறை: குடை மங்கலம் புறநானூறு 60)

இதில், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவனின் குடையைப் பற்றிப் பாடியிருக்கின்றது. காட்டிற் சென்ற பரிசிலன் விசும்பினுச்சியிலிலங்கிய நிறைமதிகண்டு, அது வளவனின் குடை போன்றிருந்தமை நோக்கி, மனைவியுடன் பன்முறை தொழுதானென்றிச் செய்யுள் கூறுகின்றது. 'வெயின் மறைக் கொண்ட வெண் குடை' என்பதற்குப பொருளுரைக்குங்கால், "வெயில் என்றது பகைவரானுங் கொடியோரானும் வரும் வெம்மையே' என்று நச்சினார்க்கினியர் நவில்கின்றார். வெம்மையையும் வெளிச்சத்தையும் வேறு பிரித்தெண்ண வொண்ணாது. இரண்டுமொன்று கூடி மக்களை வாட்டுகின்ற வெப்பநாட்டில், காரும் நிழலுங் குடையுமாகிய கருமையின் வகைகள் இனிமை பயத்தல் வியப்பன்றே.

' மெய்க் கொள் பெரும்பனி நலியப்பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்திகூரப்
பறவை படிவன வீழ்க் கறவை
கன்று கோளொழியக் கடியவீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்

(நெடு நல்வாடை : 7-12)

நாளிலே மக்கள் நெருப்பை நீரென வேட்டு, நீரையழலென வஞ்சுவர். அந்நாளில் கிழவருங் குழவிகளும் ஞாயிறு காயுமிடத்திலமர்ந்து குளிர் நீக்கிக் கொள்கின்றனர். ஆனல், இட்ட வடி கொதிக்க, எடுத்தவடி கொப்புளிக்கச் சுடுகதிர் பெருக்கும் ஞாயிற்றின் கொடுமை தாங்க வரிதாகும். முதுவேனில் வரும் போது, பொழுது சாய்ந்து, நிழல்கள் நீண்டு, தென்றல் வீசும் மாலை நேரத்தை மக்கள் எவ்வளவு விரும்பி நிற்கின்றனர்! முது வேனிலில் நடுப்பகல் வேளை நள்ளிரவுபோ லமைதியாகின்றது. ஆறியமர்ந்திருக்கு மிரவு எப்பொழுது வருமென்று மக்கள் ஏங்குகின்றனர். ஆதலின், பொதுவாக வெறுக்கப்படுமிருளும் விரும்பத்தக்க ஒன்ருய் விளங்குங் காலமுமுண்டு. (தொடரும்)

பண்டைத் தமிழ்ச் சொற்கள்.

II

(திரு. M V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.)

கடவுளைக் குறிக்கும் இன்னொரு பண்டைத் தமிழ் சொல்லானது இயவுள் என்பது. இயவுள் என்ற சொல் இய என்னும் பகுதியும் உள் என்னும் தொழிற்பெயர் விகுதியுஞ் சேர்ந்து ஆன சொல். இய என்ற பகுதிக்கு இயக்கு அல்லது நடத்து என்று பொருள். இயவுள் என்பது இயக்குதல் அல்லது நடத்துதல் எனப் பொருள்படும். அஃது ஆகு பெயராய் இயக்குதலைச் செய்கிறவனைக் குறிக்கின்றது.

2. இயக்குகிறவன் என்றால் எவரை அல்லது எதனை இயக்குகின்றான் என்ற கேள்வி ஒருவனது உள்ளத்தில் உண்டாகும். இந்தக் கேள்விக்கு விடையளிக்க ஆராய்ச்சி எழும் பொழுது இயக்கப்படும் பொருள் இல்லாவிடின் இயக்கும் பொருளும் உளது ஆகாது ஆதலினாலும், உலகில் நாம் கண்ணாற் காணும் உயிர்ப்பொருள்கள் உயிரில் பொருள் ஆதலானும், இந்த உயிர்ப்பொருள் உயிரில் பொருள்கள் இரண்டும் இயக்கப் படும் பொருள்கள் என்றும், இவற்றை இயக்கும் பொருள் ஒன்று மூன்றாவது பொருள் இருத்தல்வேண்டு மென்றும் பண்டைத் தமிழர்கள் அறிந்தார்கள். அதன்மேல் ஆராய்ச்சி எழும் பொழுது உயிர்ப் பொருள்கள் தாமாக உட்கருவியாகிய மனதினால் அறிந்தும் புறக்கருவியாகிய உடலை அசைத்தலினாலும் ஓர் இடத்தைவிட்டு மற்றோரிடத்துக்கு இடம் பெயர்தலினாலும் இயக்கப்படுகின்றன என்றும், உயிரில் பொருள்கள் இருந்த இடத்தில் ஏவ அசைதற்கும் இடம் பெயர்தற்கும் இயக்கப்படுகின்றன என்றும் அவர்கள் கண்டு இந்த இரண்டு பொருள்களையும் இவ்வாறு இயக்குகின்ற மூன்றாவது பொருளுக்கு இயவுள் என்ற பெயரைக் கொடுத்தார்கள். இதனால் அவர்கள் துவக்கத்திற் செய்த மேற்பார்வை ஆராய்ச்சியால் மூன்று பொருள்

கள் உண்டு என்ற முப்பொருளுண்மையும் அப்பொருள்களுக்குள் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள தொடர்பையும் அறிந்தார்கள். அவர்கள் இவ்வாறு அறிதற்கு நூல் அறிவு துணையாயிருக்கலாம் அல்லது தாங்களே தங்கள் உலக அநுபவ அறிவைத் துணையாகக் கொண்டு அறிந்திருக்கலாம்.

3. முன் I-ம் கட்டுரையிற் கடவுள் என்று பெயர் கொடுக்கப்பட்ட பொருளும் இவரே. இயவுள் என்று பெயர் கொடுக்கப்பட்ட பொருளும் ஒன்றே. கடவுள் என்ற சொல் உயிர்கள் கடவுளை எப்படி அறிதல் கூடும் என்பதை விளக்குகின்றது. இயவுள் என்ற சொல் அந்தக் கடவுள் உயிர்களையும் உயிரில் பொருள்களையும் இயக்குகின்றான் என்பதையும் அவன் இயங்காமல் அவைகள் இயங்கா என்பதையும் விளக்குகின்றது.

4. இனிப் பண்டைத் தமிழர்கள் நுணுகிய ஆராய்ச்சியினாலும் யோக முறைகளினால் அறிந்த தெளிவு அறிவினாலும் இயவுள் என்று கூறப்படும் முதல்வன் உயிர்ப் பொருள்களை எவ்வாறு இயக்குகின்றான் என்னும் உண்மையையும் உயிரில்லாத பொருள்களை எவ்வாறு இயக்குகின்றான் என்னும் உண்மையையும் அறிந்தார்கள். இவ்வாறு அவன் செய்யும் இயக்கங்களெல்லாம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களின் பாற்படும் என்பதும், இந்த ஐந்து தொழில்களும் அவன் சலிப்பின்றி எப்பொழுதும் செய்தல் உயிர்கள் மலங்களினின்று நீங்கிப் பேராப் பேரின்பம் பெறும் பொருட்டு என்பது அவர்கள் அறிந்தார்கள். இந்த உண்மைகள் சித்தாந்த நூல்களில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. அங்குக் காண்க.

5 ஆகவே, இயவுள் என்ற சொல்லால் கடவுளாகிய முதல்வன் உயிர்கள் தங்களை அநாதியே சேர்ந்துள்ள மலப் பிணிப்பிலிருந்து நீங்கித் தன்னை அடைந்து பேரின்பம் அடைதற் பொருட்டுத் தனுகரண புவன போகங்களைப் படைத்துக் காத்து அழித்தற் பயனாக அவைகளை இயக்குகின்றான் என்பதும் உயிர்களுக்குத் தகுதி உண்டாக்கும் பொருட்டு முதலில் அவைகளை

அவன் உலகபோக நுகர்தற் பொருட்டு மயக்கி இயக்குகின்றான், என்பதும் தகுதி வாய்ந்தபின் அவைகளைச் சிவபோகம் நுகர்தற் பொருட்டுத் தெளிவித்து இயக்குகின்றான் என்பதும் பெறப்பட்டன. இவ்வளவு உண்மைக் கருத்துக்களையும் தன்னுள் அடங்கி நிற்கின்றதொரு குறிச் சொல்லாக இயவுள் என்னுஞ் சொல் பண்டைத் தமிழ் நூல் வழக்கில் விளங்கினது என்று இங்கே சுருக்கமாகக் கூறப்பட்டது.

அழகியற் கலைகள்.

[திரு டி. எஸ். கந்தசாமி முதலியார் அவர்கள் பி. ஏ.]

செந்தமிழ் நாடு செழுங்கலைகள் பலவற்றினும் மிகச் செழித் தோங்கியது வெளிப்படை. பண்டைக் காலத்தில் அருங்கலைகள் யாவும் பல்கி இருந்ததெனினும் இப்பொழுது அக்கலைகள் மிகச் செழிப்புற்றிருக்கின்றன என்று சொல்வதிற்கிடமில்லை. எம்மக்கள் கூட்டத்தில் அருங்கலைகள் பயிலப்பட்டும், வளர்க்கப்பட்டும் பாதுகாக்கப் படுகின்றனவோ அம் மக்கள் கூட்டமே அறிஞர் பெருமக்களால் போற்றத்தகும் நாகரிகத்தில் நனிசிறந்துள்ள தெனக் கூறலாம். ஏனெனில், நாகரிகம் என்னும் சொல் மக்கள் புற ஒழுக்கத்தைச் சுட்டாது, அகப் பண்பையே சுட்டா நிற்கும். தெய்வப்புலமை திருவள்ளுவனாரும்,

> பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்.

என்று பொய்யாமொழியால் கண்ணோட்ட மென்னும் கழி பெருங்குணமே நாகரிகம் எனக்கூறி விளங்கவைத்துள்ளார். மக்கள் நாகரிக முதிர்ச்சியே அருங்கலைகளின் தோற்றத்திற்குக் காரணம். அங்ஙனம் ஆவதோடு அருங்கலைப் பயிற்சியே நாகரிகத்தை வளர்க்கும் நன்னீருமாம். பண்டை மன்னர்களும், அமைச்சர்களும், மற்றுமுள்ள செல்வர்களும் புலவர் பெருமக்களைப் போற்றிப் பாராட்டி வந்தமையால், அழகியல் அருங்

கலைகளுள் தலைசிறந்த செய்யுட்களும், காவியங்களும் திகழ்ந்து ஓங்கின. இப்போது அத்தகையோர்களால் புலவர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள். ஆகையால் புலவர்களும் குன்றுவராயினர்; செஞ்சொற்கவிகளும் இலவாயின. கண்கவர் ஆடை உடுத்தலும் உள்ளங்கவர் உணவுண்டலும், காரை வெல்லும் கடு விசை வாகனங்களில் செல்லுதலுமே நாகரிகம் எனக்கொள்ளும் இக்காலத்தில் அருங்கலை விநோதங்களின் அழகைப்பற்றிக் கூறுவது எதற்கு எனச் சிலர் கேட்கலாம். அவர்கள் இவ்வருங்கலைகள் ஒருவருக்குத் தாம் உணணும் சோற்றினும், உடுக்கும் உடையினும், பருகும் நீரினும் இன்றியமையாதன என்பதை அவர் அறியார். பண்டைத் தமிழ் மக்கள் அருங்கலைகளின் அழகைக்கண்டல்லவோ தம் உயிரினும் சிறந்த தண்டமிழ் மொழியை இயல், இசை, நாடகமென மூப்பகுதியாகப் பிரித்தார்கள். அதனை அறியாத நாம் தமிழ் என்பது இயற்றமிழ் ஒன்றே எனக்கொண்டு, இசையையும் நாடகத்தையும் அறவே கைநழுவ விட்டு, அவற்றைப் பெரும்பாலும் தகவிலார் மாட்டு ஒப்புவித்துள்ளோம். இயற்றமிழில் அவலச் சுவையையோ அல்லது வீரச்சுவையையோ செய்யுள் முகமாகப் புலப்படுத்தினால் அதனை உணர்ந்து கொள்ளுதல் இயற்றமிழ்த்துறையில் கைபோய வல்லார்க்கே சாலும். பிறர்க்கு அது சாலாது. ஆனால் எச்சுவையையேனும் இசை வல்லார்கள் இசைத் தமிழிலே இசைப்பார்களானால் இயலிலேனும் இசையிலேனும் அறிவிலாதார்க்கும் அது புலனாவதோடு, அது அவர் உள்ளத்தில் சென்று அதுதன் வயமாக்குவதை நாம் கண்கூடாகக் காணலாம். இசைத்தமிழ் ஒருவர் உள்ளத்தை உருக்கி இரங்கச்செய்வதையும், உவப்பித்துக் களிக்கச்செய்வதையும் நாம் காண்கின்றோம். அவ்வுள்ள நெகிழ்ச்சி அடைபவர்கள் பெரும் புலவர் அல்லாதிருப்பதையும் காண்கின்றோம். அப்படி உள்ளம் நெகிழ்பவருட் பலர் சாமானியராகவே யிருக்கிறார்கள். இசைத்துறை முற்றியவர்கள் என்று சொல்வதற்கும் இல்லை. காரணம் வேண்டாது உள்ளம் நெகிழ்பவர் என்று சொல்லுதலும் அமையாது. ஆதலின் அவர் அங்ஙனம் இரங்குதற்கும் மகிழ்தற்கும் காரணம்

இசைத்தமிழில் இயற்கையில் அமைந்து கிடக்கும் பெருங்குண மும் நலனும் என்று தான் சொல்லுதல்வேண்டும். எடுத்த மொழியாலும் ஏதுக்களாலும் பலபடப்பன்னினும் அறியப் படாதசெய்திகளும் பிறவும் நடத்தலில் வல்லான் ஒருவன் நடிப் பின் அவன் இங்கிதம், செயல், வடிவு முதலியவைகளின் விளை யாட்டினாலேயே எவர்உள்ளத்திலும் பதியுமாறு விளங்கும். எடுத்துக்காட்டாக ஒன்று கூறலாம் :—

அரிச்சந்திரன் அவலக்கடலுள் ஆழ்ந்தான் என்ற செய்தி யை எதிர் நிற்போர் உள்ளத்தில் பதியுமாறு செய்வித்தல் வேண் டுமென்று வைத்துக்கொள்வோம். அப்படிச் செய்தற்கு மொ ழிகளைப் பன்முறையும் அடுக்கி அடுக்கி "மீகாமன் இல்லாமரக் கலம் நடுக்கடலில் கவிழ்ந்தபோது அதில் உள்ளார் துன்புறுவது போல் கரைகாணுத் துன்பம் எய்தினான்" என்றுசொன்னால் அவ் வேதுவின் நுட்பத்தைச்சிலரே அறிந்து அரிச்சந்திரன் அடைந்த இடுக்கண்ணின் பரிமாணத்தைச் சிலரே உணர்வர். ஆனால் அத னைக் கேட்டார் அரிச்சந்திரன் எய்திய துன்பத்தை அப்போழ்து தமது உளக்கண்ணில் காண்பதுமில்லை; அதற்காகத் தாம் இரங்கு வதுமில்லை. நாடக அரங்கில் நடித்தலில் கைவல்ல நடி ஒருவன் அரிச்சந்திரன் வேடம் தாங்கி யாதொரு வார்த்தையும் தன் வாயினால் பேசாமல் அரிச்சந்திரனுக்குற்ற இடுக்கண்ணையும் அத னால் அவன் அடைந்த பரிவையும், அவன் நடித்துக்காட்டும் போது, அங்கு பார்க்கின்றவருள் சிலர், தாம் இருப்பது நாடக அரங்கென்றும் அரிச்சந்திரனாக வந்து கவல்கின்றவன் ஒரு நடி யென்றும் நோக்காது தம்மை மறந்து அவன் கொண்ட அவலத் திற்குத் தாம் இரங்கி மனம் நைகின்றார்கள். ஆகவே மொழி களால்செவ்விதிற்றெரிவிக்கப்படாச் செய்திகளும், உண்மைகளும் இசையினாலும் நாடகத்தாலும் பாமரர் உள்ளமும் கொள்ளும்படி புலப்படுத்தலாம் என்று புலனாகின்றது. இசைத்துறை முற்றிய உடன் தம் இசைவன்மையால் மகிழ்ச்சி ததும்பும் இசைகளைப் பாடின் அதனைக்கேட்போர் வறியராயினும், மகிழ்ச்சி கொள்ளும் காரணம் இலராயினும், இசை வயத்தராகிப் பெரு மகிழ்ச்சியை யும் பேருவகையையும் கொண்டு களிக்கின்றார்கள். சோகம்

ததும்பிய இசை யெடுத்துப்பாடினும் அதனைக் கேட்போர் அவ் விசையில் ஈடுபட்டு நெருப்புமுன் உருகும் வெண்ணெய்ப்பாவை யைப்போல் நெக்குவிட்டுருகி உளம் இரங்குகின்றனர். செவ்விய ஓசை அணுக்கள் நிறைந்த இசை, கேட்போர் உள்ளத்தைக் கவர்கின்றது. நடி தன் வடிவில் தோற்றுவித்த செயல்களால் காண்போர் உள்ளத்தைக் கவர்கின்முன். அதுபோலவே ஓவியத் துறை முற்றிய ஒருவன் இசையிலும் நாடகத்திலும் எத்துணை க்வைகள் அழகுபெற காண்போர் கேட்போர் உள்ளத்தைக் கவரும்படி தோற்றுவிக்கலாமோ அத்துணைச்சுவைகளும் ஓவியத் துறை முற்றியவனுல் எழுதப்பட்ட ஓவியத்தில் புலப்படுத்தலாம். நம்முட் பெரும்பாலர் அழுவதெப்போது உவகை கொள்வதெப் போது என்று அறியமாட்டார்கள். இரங்கத்தக்க காலங்களை யும் மகிழத்தக்க காலங்களையும் ஒருவனுக்குப் பயிற்றுவது மேற்கூறிய அருங்கலைகளே. பண்டைத் தமிழ் மக்கள் படைத்த ஓவியங்களும், சிலைகளும் மேலை நாட்டு அருங்கலைவாணர்களால் பெரிதும் பாராட்டப்படுகின்றன. ஆனுல் நம்மால் பெரிதும் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன.

இந்நாடகத்தைப் புலவர் பெருமக்கள் போற்றுகின்முர் இல்லை. அறிஞர் பெரு மக்கள் ஆடிக்காட்டுகின்முர் இல்லை. நாடகத்தின் மூலமாக வயிறுவளர்க்கும் ஒரு சிறு கூட்டத்தார் கையில் ஒப்பு வித்துவிட்டார்கள். இசைத்துறையில் வல்லார்களை இங்குமங் கும் சிலரைக்காணலாமென்ருலும் அவர்களுள் இசைத்தமிழ் உணர்ந்தவர்களைக் காணல் அரிதாக இருக்கின்றது. ஓவியத் துறையும் அறிஞர்களால் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் மனப்பான்மைக்கேற்றபடியே சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் இசைக்கேனும் ஓவியத்துக்கேனும் ஒரு தனிப்பட்டம் ஏற்படுத்த வில்லை. அத்துறைகளை அவர்கள் போற்றவுமில்லை. இவ்வழ கியல் அருங்கலைகள் எல்லாம் மீண்டும் புத்துயிர் பெற்றுச் செழித் தோங்கிவளரவேண்டுமானுல் பல பத்திரிகைகள் அவ்வழிகளிலே உழைத்தல்வேண்டும். அவைகளைச் செல்வர்கள் பொருளுதவி யால் ஊக்குதல் வேண்டும்; புலவர்கள் தம் புதுநலம் படைத்த பொய்யில் கட்டுரைகளால் புனைதல்வேண்டும். —கார்த்திகேயன்

தக்கயாகப் பரணியைச் சீகாழியார் போற்றி வந்தது.

[ப. அ. முத்துத் தாண்டவராயபிள்ளையவர்கள்]

சைவசித்தாந்தக் கழகத்தார் புததகசாலையிலிருந்து தக்கயாகப் பரணிப் பிரதி சிலவற்றைச் சீகாழி வாசிகள் சிலர் தருவித்து வாசித்து வருகின்றனர். இக்கழகத்தார் பறபல வெளியீடுகளை ஓரிடத்துச் சேகரித்து வேண்டியவர்களுக்கு வேண்டிய நூல்களை அவ்வப்போது அனுப்பிப் பேருதவிபுரிந்து வருகின்றனர். ஐரோப்பாவில் இத்தகைய புத்தக நிலையங்கள் அமைந்திருத்தலின் அங்குள்ளாருக்கு எப்புத்தகங்களும் எளிதிற் கிடைக்கின்றன. இந்நாட்டில் இருந்த குறையை இக்கழகத்தார் இப்போது தீர்த்துவருகின்றனர். இனியும் தங்கள் புத்தக நிலையத்தை இன்னார் பெருக்கி இந்நாட்டவர்க்குப் பலவுதவி புரிவார்களென்பது யாவரும் விரும்புவது.

மஹாமஹோபாத்தியாயர் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் தக்கயாகப் பரணியை இவ்வாண்டு வெளியிட்டுத் தமிழுலகத்திற்குப் பெருநன்றி செய்கின்றார்கள்; ஏனைச்சங்கநூன் முதலியவற்றை வெளியிட்டருளிய வண்ணமே இந்நூலையும் பல ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் செவ்விதாக அமைத்து இருக்கின்றார்கள். இச்சிறந்த பேருதவிக்கு யாம் அனைவரும் மிக்க கடமைப்பட்டிருப்புதோடு இனியும் பல நூல்களை வெளியிட்டருளுவார்களெனப் பிரார்த்திக்கின்றோம். இவ்வூரவர்களுக்கும் பரணிப்பிரதி கிடைக்கவில்லையென்னும் பெருங்கவலை நீங்காவிட்டமையாற் பல புத்தகங்களைத் தருவித்துத் தமது முன்னோர் போற்றிவந்த வண்ணம் போற்றி வருவார்களென நம்புகின்றேன்.

இவ்வூரில் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பள்ளிக்கூடத்துப் பயிலுஞ் சிறார் புரட்டாதி மாதம் மஹாநவமி உற்சவகாலத்து ஆடம்பர வேடம்பூண்டு பல பாடல்களைப் பாடிக்கொண்டு வருவார். அப்பாடல்களிற் சில காழிச்சில்லரைப் பிரபந்தமென்று

இவ்வூர்ச் சிதம்பர வாத்தியாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. வயது வந்த பெரியோர் பரணியைச் சிரபுரத்து நாகநாதர்கோவில் ஓட்டக்கூத்தர் திருவுருவத்தருகு வைத்துப் பூசித்து எடுத்துக்கொண்டு பெரியகோயில் வலம்புரிமண்டபம் போய் ஓதிவருவார்கள். இம்முறை கோவை உலா அந்தாதி கலம்பகம் பரணி கற்பதற்கு ஏற்ற சாதனமாகக் காணப்பட்டது. இக்காட்சி மிக்க சிறப்பாகக் காணப்பட்டு வந்ததாம்.

சீகாழி பல பெரியார்களின் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் இருந்தது. அவருள் கண்ணுடைய வள்ளலார் மேலை வீதி மேற்புறத்து மங்கையர்க்கரசி விநாயகர் சந்நிதியிலும், கூத்தர் சிரபுரச்சந்நிதி பெரிய கைக்கோளர் சின்ன கைக்கோளர் வீதியில் பழைய கழுமலநதியின் இருசாரிலும், அருணாசலக் கவிராயரும் சிற்றம்பல நாடிகளும் வடக்குரத வீதியிலும், திருக்கை கோட்டி திராவிட கலாநியமத்தார் அவ்வீதியில் சிவ. கண்ணுசாமிப்பிள்ளை அவர்கள் வீட்டுக்கு அருகிலும், திருஞானசம்பந்தர் இரட்டை அக்கிரகாரம் சோளேச்சுரமுடையார் கோயிலுக்கு அண்மையிலும், சிதம்பரநாதமுனிவர் தெற்கு ரதவீதி தருமபுரமடத்திலும் கங்கை மெய்கண்டாரும் மச்சுச்செட்டியருணமச்சிவாயரும் கீழவீதியிலும் வசித்து வந்தார்கள் என்று பெரியோர் அவ்வில்லங்களை இன்றும் காட்டுகின்றனர். இவர்கள் பலகாலத்து இவ்வூரிற் பிறந்த பெரியோர்கள் என்பது இவ்வூரார் கூறிவருவது.

தக்கயாகப்பரணி இவ்வூரிலே நேமிநாதரும் பேராசிரியரும் பட்டோலை பிடிக்கக் கவிச்சக்கரவர்த்தி பாடினார் என்று இந்நகரமாந்தர் கூறுவதற்கு அகச்சான்றாகச் சட்டைநாதர் துதியும் சம்பந்தர் பிரபாவமும் இருப்பதனோடு சோழமண்டல சதகமும் புறச்சான்றாகும். பரணியின் ஏட்டுப்பிரதி இவ்வூரிலும் இவ்வூர்க்கோயில் சுவான்தார்களாகிய தருமையாதீன கர்த்தர் திருமடாலயத்துப் புத்தகசாலையிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இனி உரையும் இவ்வூரிலேயே எழுதப்பட்டது என்பதற்கு உரைப்பிரதிகள் இரண்டினுள் ஒன்று தருமபுர ஆதீனத்திலிருந்து மஹாமஹோபாத்தியாய சுவாமிகள் 47 வருடங்களுக்கு

மூன் பெற்றது; மற்றொன்று இன்றும் அத்திருமடாலயத்து இருப்பது. பின்னர்க் கண்ட உரைச்சுவடியில் இறுதியிற் காணப் படும் தாழிசை (அருணஞான..........)யும், செய்யுளும் (சீர்கு ரோதன 1745) சாட்சியாகும். இவ்விரண்டாம் செய்யுளால் உரையாசிரியர் சிதம்பரநாத முனிவர் எனவும், பட்டோலே பிடித்தார் பெரியதம்பி எனவும் இவ்வூரார் கூறிவருகின்றனர். சிதம் பரநாதமுனிவர் அநேக தமிழ் நூல்களை இயற்றியவர்; அருணாசலக் கவிராயர் பெரியதம்பி முதலாயினோர்க்குக் குருவானவர்.

இனிப் பெரியதம்பி என்பவர் யாவர் என விசாரிப்போம். ராபர்ட் சூயல் துரையவர்கள் எழுதிய List of the Antiquarian Remains ல் தரங்கம்பாடியிலுள்ள இரண்டு தாமிர சாசனங்களில் அச்சுதப்ப நாயக்கர் (1572—1614) தமது அரசாட்சியில் சகம் 1631 (=1609 கி. பி.) தேவாலய விசாரணைக்கு நியோகித்த சைவ சமயப்பற்றுள்ளவரான பெரிய மரைக்காயர் என்னும் கனதனவானுடைய கொழுப் பேரராகிய பெரியதம்பி என்னும் சோனகர். இவரும் தமது பிதா மகனைப் போலவே சைவ முனிவர்களை அடுத்து உண்மை நூல்களைக்கற்று மஸ்தானுகித் தமிழில் உடலறிஞானம் முதலிய நூல்களை யியற்றிப் பிறை யாற்றிற் சமாதியிலிருப்பவர். இவர் 35-ம் வயதில் காழியில் வந்து சிதம்பரநாத முனிவரிடம் கற்றுச் சொல்லியாய்ப் பட்டோலை பிடித்தவர் என்றும் ஐதிகம் மேற்கண்ட கவியால் திடப் படுத்தப்படுகிறது.

இந்நிலைமை யாகவே காழி வாசிகளைப் பரணி நூற்பிரதி களைத் தருவித்துத் தமது முன்னோர் போலவே போற்றி வாருங்கள்என்று தமியேன் வேண்டுகிறேன்.

காழியா ரெச்சட்டக் கூத்தன் கனிந்துசொல் பரணி தன்னைக்
காழியார் சிதம்ப ரேசன் கனிந்துசொல் லுரையி னேடுங்
காழியார் நாங்கள் பாடக் கருணைசெய் தருளு மெங்கள்
காழியார் பிள்ளை யார்செங் கமலநற் பதங்கள் தாமே.

உகள...., ஞாயில்...., திருமடத்...., பிள்ளை...., நாணீர்...,
இவை மஹா நவமியிற் பாடும் பாடல்கள்.

சீர்குரோ தனவருடம் புரட்டாதி முதற்றேதித்
　　திங்க டன்னிற்　　　(Mon. 17th Sep. 1745)
காருலவுஞ் சீகாழிச் சிதம்பரநா தமாமுனிவன்
　　கருணை யாலே
பார்புகழுந் தக்கயா கப்பரணி தனைமுகித்திப்
　　பதியி னன்றாய்
ஏர்பெறுந்தா ழிசைகளையு முரைதனையும் பெரியதம்பி
　　யெழுதி னானே.

அருண்ஞான குருபீட மடிவாழி யடியார்க ளடிவாழியேன்
இருளான பழிமாற விகலான வழிமாற லிசைவாழியே.

இவை ஆதீனப்பிரதிகளிற் கண்டன, அச்சுப் பிரதியிலும் உள்ளவை. இவற்றின் மேலும் இக்காழியிலிருந்த வித்துவ சிரோன்மணிகளாகிய சிதம்பர வுபாத்தியாயர் சொக்கலிங்க செட்டியார் முதலாயினார் பரணித்தாழிசைகளை உச்சரிக்கும் போதெல்லாம் உரையியற்றினவர் சிதம்பரநாத முனிவர் என்று கூறி வந்தனர். இதன் உண்மையைத் தருமபுரவாதீனப்பிரதிகளையும் இதர கர்ணபரம் பரைகளையும் ஆராய்ந்து மஹா மஹோபாத்தியாயரவர்கள் வெளியிட்டருளுவார்களாக. இதற்கிடையிற் பிறர் பிறகொள்கைகளைப் புகுவிக்காமலிருப்பது நலம்.

கொடுக்கூர் கோவிந்தன்.

(காழி) சிவ. கண்ணுசாமி யவர்கள் B. A.

(௭-ம் சிலம்பு ௭௪௨-ம் பக்கத் தொடர்ச்சி)

“அது கேட்டு, நான் இன்னான் என்று அவர்களுக்குத் தெரிவித்தேன். என்னை அவர்கள் பொய்ய னெனக் கூறி நகைத்தார்களேயன்றி நான் கூறிய உண்மையை நம்பவில்லை. எனக்கு ஒன்றும் விளங்காததால், வழக்கம்போல் என் முக வாய்க் கட்டையிற்கையை வைத்தேன். என் தாடி களையப் பட்டிருக்கக் கண்டேன். தாடியோடிருந்தாலே நான்தான்

பீதாம்பரயோகி யென்று அடையாளங் கூற முன் வருபவர்கள் ஒரு சிலரே யிருப்பார்கள். அது நீக்கப்பட்டபின் என் சொந்த வேலையாளான கருப்பையன் கூட என்னைக்கண்டு கொள்வானே மாட்டானே என்ற ஐயம் எழுந்தது. கருப்பையனும் அன்று ஊரிலில்லை. ஆண்டிற்கு நான்கு முறை அவனைத் திருக்கழுக்குன்றத்திற்கு அனுப்பிக் குழந்தைகளின் நலத்தைப் பார்த்துக்கொண்டு பொருள் கொடுத்து வரச் சொல்வது வழக்கம். அன்றும் அதுபோல் அவனை யனுப்பி வைத்திருந்தேன்''

சம்பு :—'' அது சரி நீர் ஏன் உணர்விழக்க நேரிட்டதென்று கூற முடியுமா ?''

யோகி :—'' அது ஏனென்று தெளிவாகத் தெரிந்தால் முன்பே கூறி யிருக்க மாட்டேனா ? ஆனாலும் இதற்கெல்லாம் ஆட்டாளியார் என்பதை அறிவேன். ஆம், வேறு யாரும் இருக்க முடியாது. என் தங்கை மகன் தான் இப் பழிச் செயலைப் புரிந்திருக்கவேண்டும். என் தங்கையோ நாங்கள் எவ்வளவு எடுத்துச் சொல்லியுங் கேளாமல் ஒரு போக்கிலியை மணந்து கொண்டாள். ஒரு ஆண் குழந்தை அவளுக்குப் பிறந்தது. அக்குழந்தை பிறந்த சில தினங்களுள் அவள் இறந்து போனாள். அவள் மட்டும் உயிருடனிருந்தால் இச் சிறு பயல் இத்துணைக் கொடியவனாக வளர விட்டிருக்க மாட்டாள்.''

சம்பு :—'' அப்படியானால் உம் தங்கை மகன் அன்று உம் வீட்டிற்கு வந்தானென்றா கூறுகிறீர் ?''

யோகி :—'' ஆம், என்னிடமிருந்து பணம் பிடுங்கிச் செல்வதற்கு எத்தனையோ முறை அதற்கு முன் வந்திருந்ததுபோல் அன்றும் வந்தான். அவனைக் காணவே எனக்குப் பிடிப்பதில்லை. ஆயினும் என் தங்கையை நினைத்து அவனுக்கு வேண்டிய தளித்து வந்தேன். 'தொண்டை வரளுகிறது, நாவுலர்கிறது; உண்டு பல நாளாயின' என்று கதறினான்! நான் முன் கூறியதுபோல் கருப்பையன் அன்று ஊரிலில்லை யாதலால் நானே அவனுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை யெடுத்து வர உள்ளே சென்றேன். ஆம், அது வரையில் தான் தெரி

கிறது. அதற்கு மேல் நினைவில்லை. என் பின்னேயே தொடர்ந்து வந்து என்னை அவன் பின் புறமிருந்து தாக்கியிருக்க வேண்டும் என்றே நம்புகிறேன். ஆம் என்னை, வயது சென்ற என்னை, அவனுக்குத் தீங்கேதும் நினையாமல் நன்மையே செய்யக் கருதிய என்னை, அவன் பின்னிருந்து தாக்கியிருக்க வேண்டும்.''

சம்புலிங்கத்தின் மூளை விரைவாக வேலை செய்து கொண்டிருந்தது. இப்போக்கிலியார்? கொடுக்கூர் கோவிந்தன் தானா? அன்றிரவு நுங்கம் பாக்கத்தருகில் குதிரை மீது வந்தவன் கோவிந்தனைப்போல் இருந்தானே? ஆ! அவன் கோவிந்தனேயானால் நந்தவனச் சந்தையிற் குறி சொன்னவனும் அவனாகத் தான் இருக்கவேண்டும். ஆம், அவன் தான் தன் தலையின் பின்புறத்திற்றாக்கித் தன்னைப் போலீஸ்வீரர் கைகளிற் சிக்கும் படிச் செய்திருக்கவேண்டும்.

ஆனால் கோவிந்தன் முறைப்படி இதே சிறைக் கூடத்துளல்லவோ இருக்கவேண்டும? அவன் தப்பிச் சென்றதாக இது வரைக் கேள்வியுறவில்லையே.

இருக்கவேண்டும் என்று நினைத்தது சரி; ஆனால் உண்மையில் இருக்கின்றானா? இல்லை. பயல் எப்படியோ தப்பிச் சென்று விட்டிருக்க வேண்டும் எனக் கண்டுகொண்டான். எவனோ ஒரு நாடோடி தப்பிச் சென்றானென்று செய்தி பரவிய அன்றே இக்கோவிந்தனும் தப்பிச் சென்றிருக்க வேண்டும். ஏதோ உட்கருத்தைக்கொண்டு போலீஸார் இவன் தப்பியதை வெளிப்படுத்தாதிருக்கின்றனர் போலும்!

சம்பு:—"உமது தங்கை மகனுக்கு நெற்றியில் நீண்டதோர் தழும்புண்டோ? மூக்கு மிகவும் நீண்டு நுனியிற் சிறிது வளைந்திருக்குமோ?''

யோகி:—"அவன் தான். அவன் தான் உனக்கு அவனை நன்றாகத் தெரியும்போல் இருக்கிறதே? ஒரு வேளை உன் கூட்டாளிகளில் அப்பயல் கோவிந்தனும் ஒருவனோ? ஐயை

யோ, அப்படித் தானென்று நீ ஒப்புக் கொண்டால் நான் அமைதியாய் இறக்கப் போவதில்லை.''

சம்பு :—'' அவனுக்கும் எனக்கும் முட்டப்பகை. அவன் என் கண் முன்பட்ட அதே நொடியில் கொல்லப் பட்டானுனால் நீர் என்னை மன்னிக்கவேண்டும்.''

யோகி :—'' கொன்றுவிடு, கொன்றுவிடு, சம்புலிங்கம், வேறு ஆலோசனை யின்றி உடனே கொன்றுவிடு. அவன் உயிருடனிருந்தால் இன்னும் எத்துணைத் தீங்கிழைப் பானென்று கூற முடியாது.''

சம்பு :—'' உமது வீட்டிலிருந்த பித்தளை வெள்ளிக் கலங்கள் தானு அச்சாக்குப்பையிற் கண்டவை ?''

யோகி :—'' ஆம், அவைகளாகத் தானிருக்க வேண்டும். என் வீட்டுச் சொத்தையே எடுத்து வைத்து எவன் வீட்டிலோ நான் கொள்ளையடித்து வந்ததாக வல்லவோ பெயர் கட்டினுன் அப் பழிகாரன் ?''

சம்பு :—'' அவன் இச் சிறையிலிருந்து தப்பியவுடன் நேரே உம் வீட்டிற்கு வந்திருக்கவேண்டும். சூழ்ச்சி செய்வதிற் றேர்ந்தவனுதலால் உம்மைத் தொலைத்து உமது பெயரைச் சூடிக்கொண்டால் எளிதில தப்பிக்கொள்ளலா மென்பதைக் கண்டு கொண்டானுதலால் உம்மை உடனே வெளியேற்றி விட்டான்.''

யோகி :—'' என்ன சொன்னுய் ? இச் சிறையிலிருந்து தப்பினுனு ? அவன் ஏன் இங்கே வந்தான் ?''

சம்பு :—'' ஏனு? குப்புசாமி ஐயரைக் கொன்ற குற்றத்திற்காக. அவன் இங்கேயே இருந்திருந்தால் இதற்குள் தூக்கிற் கல்லவோ சென்றிருக்கவேண்டும் ? ஏன், குப்புசாமி ஐயர் கொலையுண்டதைப்பற்றி நீர் கேள்விப்பட வில்லையா ?''

யோகி :—'' அவனிறந்ததைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனுல் கொன்றவன் யாரென்று தெரியாது. அந்த ஐயரை நான் நன்கறிவேன். என் வீட்டிற்கு இரண்டு மூன்று தடவை அவனே குறிகேட்க வந்திருக்கிருன். ஆ! கொடிய

நஞ்சை யொத்த ஒரு ஆண்பிள்ளை இருக்கக் கூடு மானல் அது அவனகத் தானிருக்கவேண்டும். அவன் ஒழிந்தது நல்ல தென்று தான் கூறவேண்டும். இருந்தாலும் இந்தப் பயல் கோவிந்தனை கொன்றன் அவனை? கொலைகாரப் பயல் என் பெயரைத் தாங்கி இப்பொழுது ஊரை ஏமாற்றி வருகிறனே? நானே அவனல் வஞ்சிக்கப்பட்டு இச்சிறையுட் கிடந்துழல் கிறேன். என் மகனின் குழந்தைகள் மட்டும் இல்லாமலிருந்தால் நான் இருந்தாலென்ன இறந்தாலென்ன? ஒன்றுமில்லை. ஆயி னும் இப்பாழும் அறையில் அழுவாரற்ற பிணமாய்க் கிடக்க எனக்குத் துணியவில்லை.''

சம்பு:—"என்னலியன்ற உதவியைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். கோவிந்தன் விதி முடிந்து விட்ட தென்றே வைத்துக் கொள்ளும். ஏற்கனவே அவன்மேல் எனக்கு ஒரு கண் உண்டு. இப்பொழுது உமக் கிழைத்திருக்கும் தீங் கை நினைக்கும்போது ஆ, அவனைக் கண்டால் கண்டிப்பாய்க் கசக்கிப் பிழிந்து விடப்போகிறேன்.''

பெரியவர் நன்றியறிதலுடன் சம்புலிங்கத்தின் கைகளைப் பற்றினர். அவர் கைகள் பனிக்கட்டியைப் போன்றிருந்தன. கைகளைப் பற்றினரே யொழிய அதற்கு மேல் வாய்திறந்து பேசவில்லை. சம்புலிங்கம் நீட்டிய கைகளைப் பின்னுக் கிழுக் காமல் அப்படியே உட்கார்ந்திருந்தான். தக்க வசதி யில்லாமல் அவன் உட்கார்ந்திருந்தது கைகால்களிற் கடுப்பை யுண்டாக் கிற்று. ஆயினும் எங்கே பெரியவர் வருந்துவாரோ என்ற கவலை யால் வலியையும் பொறுத்துக்கொண்டு அசையாமல் உட்கார்ந் திருந்தான்.

ஆ! கோழி கூவுகிறது! பொழுது புலரும் நேரம்.

சட்டெனக் கிழவர் எழுந்து உட்கார்ந்தார். "சம்புலிங் கம்—என்—குழந்தைகள்—நட—ராஜன்—அலர்—மே—லு—'' என்று திணறினர். தலை தொங்கிற்று. சவமாகக் கீழே சாய்ந் தார்.

சம்புலிங்கம் உடனே எழுந்து அகல் விளக்கை யேற்றிக் கிழவரது தலையணைக்குக் கீழ் அவர் கூறிய சடிதம் இருக்கிறதா

'வெனப் பார்த்தான். கடிதமும் இருந்தது. அதை யெடுத்துப் பிரித்துப் பார்க்காமல் மேற் சட்டையின் உட்பையில் வைத்துக் கொண்டு கிழவரின் திறந்திருந்த கண்களை மூடிக் கைகால்களைச் சரியாக நீட்டி விட்டு மேலே ஒரு கம்பளியைக்கொண்டு போர்த்தினன்.

அவனையு மறியாமல் தூக்கம் வந்து அவன் கண்களை அழுத்திற்று. விளக்கை நிறுத்தி விட்டுப் படுத்த மறு நொடியில் ஒரு சிறு குழந்தையைப்போல் அவன் அயர்ந்து தூங்கி விட்டான்.

ஏழாங் கூறு.

தப்பிச் செல்லுதல்.

குதிரைப் படைத் தளகர்த்தர் குறுக்கிட்டதனல் குறித்த நோக்கந் தவறித் தலைவரைக் கை நெகிழவிட்ட சம்புலிங்கத்தின் தோழர்கள் சிறிது நேரம் இடிந்து நின்று விட்டார்கள். பிறகு ஒருவாறு தேறியவர்களாய், "தலைவர் சிறைச் சாலைக்குள் அடைபட்டாலென்ன? எத்தனைபேர் இதற்கு முன் அடைபடவில்லை; அடைபட்டவர்களில் எத்தனைபேர் தப்பிச் செல்லவில்லை? நினைத்துப் பார்த்தால் அவ்வாறு தப்பிச் சென்றவர்களின பெரும்பாலோர்க்கு நந் தலைவர்க்கிருக்கும் ஆள்கட்டும், பொருளுதவியும் இருந்ததில்லை யன்றோ? இதற்கென்றே மடி கட்டிக் கொண்டு நாம் ஐவர் இருக்கும் பொழுது அவரை வெளியிற் கொண்டு வருவது கடினமோ? பணத்திற்கோ குறைவில்லை. அப்படி அது இல்லாவிட்டாலும் எங்கே எப்படி அதை எவ்வித உழைப்புமின்றிப் பெற முடியும் என்பது தெரிந்த தொன்றே" எனக் கூறிக் கொண்டே பெரிய மேட்டிலிருந்த ஒரு சிற்றுண்டிச் சாலையை நோக்கிச் சென்றனர். போலீஸ்காரர்களுடன் செய்த சண்டையில் ஒவ்வொருவருக்கும் காயங்கள் பட்டிருந்தன. ஆயினும் அதை அப்பொழுது அவர்கள் ஒருபொருட் படுத்தவில்லை. சிற்றுண்டிச் சாலையை யடைந்ததும் உள்ளே சென்று உட்கார்ந்து இனி என்ன செய்யலாம் என ஓர்ந்து ஒரு முடிவு கட்டத் தொடங்கினர்கள்.

முனியன்:—"எப்படியாச்சும் மொதல்லே அவரெ வெளிலெ கொண்டாந்தூட்டு மறுவேலெ பார்க்கணும். ஆ! ஒரு வழி யிருக்கு! நம்ப ஆளு பக்கிரி இண்ணு ஒருத்தன் நாலஞ்சு நாளுக்கு மின்னெதான் செறச்சாலைக் காவக்காரனா வேலை யொப்பு கொண்டிருக்கிறான். அவனெப் புடிச்சா நம்ப வேலையை முடிச்சிக்கலாம். என்னா சொல்றே பரட்டே?"

பட்டக்காரன்:—"பரட்டை சொல்றது அப்புறம் ஆகட்டும் எப்படி நீ வேலையை முடிக்கப் போகிறாய்?"

முனியன்:—"நல்லா புரிச்சி சொல்லணும் ஒனக்கு. நம்ப ஆளெக் கண்டு எந்த அறேலே அவரை அடைச்சிருக்கானுங்க, அந்த அறைக்குக் காவக்காரன் மொறெ யாருது, அவன் ஏதாச்சும் வாங்கிகிட்டு நம்பளுக்கு ஒதவி பண்ணுவானா இண்ணு மொதல்லே கேட்டுகிறது. அப்றம் வேலையே தொடங்கிறது. ஏம் பரட்டே நாஞ் சொல்றது சரிதானா?"

பரட்டையோ தலையை அசைத்தானே யொழிய வாயைத் திறந்து ஒன்றும் பதிற் கூறவில்லை. நந்தவனச் சந்தையில் விழுந்த அடிகளில் முக்காற் பகுதிக்குமேல் அவனுக்கே கிடைத்திருந்ததனால் அவன் மிகவும் நொந்து போயிருந்தான். அதுவுமின்றி உயிரினுமரிய தன் தலைவன் சிறைச்சாலையிலிருப்பதை நினைக்க நினைக்க அவனுக்கு ஒரு நிலை கொள்ளவில்லை.

"என்னா பரட்டே, என்னா வாயைத் தொறக்காமே தலையே மட்டும் அசெக்கிறே. வா, பொறபடுப்போய் அந்தப் பயல் பக்கிரியைப் பாத்தூட்டு வரலாம்" என்று முனியன் அழைத்தான். "இண்ணைக்கு நம்பளாலே ஒண்ணு முடியாது. நாளக்கிப் பாக்கலாம்" என்று கூறிப் பரட்டை படுத்து விட்டான். இவர்களிருவரும் செய்த ஏற்பாட்டின் படித் தலைவர் வெளியில் வருவது எளிது என்று ஒப்புக்கொள்ள முடியாமற் போயினும் அதனால் ஒன்றுங் கெடுதி நேரிடாது என்பதுணர்ந்து அவர்கள் போகட்டும் எனப் பட்டக்காரன், காசி, தம்மண்ணன் ஆகிய மூவர்களும் கோடம்பாக்கம் சென்றனர்.

பிறகு, சிறைச்சாலைக் கருகிலிருந்த சிற்றுண்டிக் கடைக்குப்

பக்கிரி அடிக்கடி வருவானென்பதை யறிந்திருந்த முனியன் அங்கே போனல் அவனைப் பார்க்கலாம் என்று நினைத்தே பரட்டையை அங்கே கூப்பிட்டது. அதன்படி மறுநாள் நடுப்பகலுக்குமேல் முனியன் பரட்டையை யழைத்துக் கொண்டு அந்த சிற்றுண்டிச் சாலைக்குப் புறப்பட்டான்.

முனியன்:—“பரட்டே, ஏன் உம் முண்ணு என்னமோ போல இருக்கே?”

பரட்டை:—“இப்ப நம்பளை ஒன்றுங் கேக்காதே ரொம்ப ஓசனையிலே நம்பள் இருக்கிறோம். தெரியிலியா ஒனக்கு?”

முனியன்:—“ஆகா, ஒன்னோட ஓசனைக்குக் கேப்பானே”

பரட்டை:“என்னடா இவன் இவ்வளவு குறியா ஓசனை பண்ராணேண்ணு வுணக்கு வயித்தே எரியுதோ? ஒன்னோட எரு மீசைக்குப் பின்னலே இருக்கிற மூளையைக் காட்டிலும் ஏந்தலேலே ரொம்ப மூளை யிருக்குது தெரியுமா ஒனக்கு?”

முனியன்:—“முட்டாளே மீசெக்குப் பின்னலேயாடா ஒர்த்தன் மூளையை வச்சிருப்பான்? ஒனக்கு இத்னியாச்சும் மூளை யிருந்தால்லே அது வெளங்கப் போவுது. அது கெடக்குட்டும். என்ன தான் அப்படிப் பெரிசா ஓசனை பண்றே சொல்லே பார்க்கலாம்.”

பரட்டை:—“ஒண்ணுமில்லே. நம்ப இந்த காவக்காரன் பக்கிரியை நம்பிக்கிட்டுப் போரமே, அவன் மின்னேயெப்போல இல்லாமல் ஞானம் பொறந்து போய் அது தப்பு இது தம்பட்டம் இண்ணு ஆரம்பிச்சாண்ணு என்ன ஆவறது? அவரைக் காப்பத்த போயி நாம்ப எல்லாருமில்லே பள்ளிக்கொடத்துக்கு போவணும்?”

முனியன்:—“போடா போ. கருப்பு நாயி வெள்ளெ நாயா மாறினக்கூட காவக்காரன் ஒருத்தனும் ஞானம் பொறந்து மாறிப்பூட மாட்டான். பைத்தியமா ஒனக்கு? ஒழுங்கா ஒருத்தன் வேலே பாத்து வந்தா இந்த நாள்லே வயிறு நெறயா சோறு கிடைக்காது இண்ணு தெரியாதா ஒனக்கு?”

(தொடரும்).

திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளை
யவர்கள் பி. ஏ., பி. எல்.

தொல்காப்பியம், கலித்தொகை, வீரசோழியம்,
தணிகைப் புராண முதலிய நூல்களின்
பதிப்பாசிரியர்.

இவர்கள் வரலாற்றை ஏழாஞ் சிலம்பிற் காண்க.